வாலிபர் நடுவில் எழுப்புதல்; வாலிபர் மூலம் நற்செய்திப்பணி!

www.bym-india.org




# Blessing

TAMIL ஜனவரி 2012
மலர் 41 இதழ் 1 எண் 430

பிரதி ரூ.10/-
ஆண்டுச் சந்தா ரூ.100/-

## 2012: நற்செயல்களின் ஆண்டு



"நற்செயல்களைச் செய்கிறதற்கு
நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் படைக்கப்பட்டு
கடவுளுடைய செய்கையாய் இருக்கிறோம்!"

*எபேசியர் 2:10*

# நற்செயல்களின் ஆண்டு!

*A. லயணல், ஆன்மீகக் கண்காணி, BYM*

அன்புடையீர்,

நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! 2011 ஆம் ஆண்டு முழுவதும் நம்மேல் சோனாமாரியாய்ப் பொழிந்த ஆசீர்வாதங்களுக்காக அவரைத் துதிப்போம்.

2012 ஆம் ஆண்டை **நற்செயல்களின் ஆண்டு** என ஆசீர்வாத இளைஞர் இயக்கம் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது. "நற்செயல்களைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்" (எபே 2:10). நாம் நமது நற்செயல்களால் இரட்சிக்கப்படாவிட்டாலும், மனிதருக்கு நன்மையாகவும் தேவனுக்கு மகிமையாகவும் நற்செயல்களைச் செய்யும்படியாக இயேசு கிறிஸ்துவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். நற்செயல்கள் எந்த மனிதனையும் நீதிமானாக்குவதில்லை என்றாலும் நீதிமானாக்கப்பட்ட ஒருவனுக்கு தேவனது திட்டம் நற்செயல்களைச் செய்வதே. ஆகவே, நமது வாழ்க்கையின் நோக்கமே தேவன் நாம் செய்யும்படியாக ஏற்கெனவே தயாராக வைத்திருக்கும் நற்பணிகளைச் செய்து அவரை மகிழ்விப்பதே.

> விசுவாசி என்னும் போர்வைக்குள் ஒளிந்துகொண்டு ஒருவர் நற்செயல்களைச் செய்யாமல் இருக்க முடியாது.

நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருக்கவேண்டுமென்றும் நாம் தளர்ந்து போகாமல் நன்மைசெய்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம் என்றும் வேதம் அறிவுறுத்துகிறது (கலா 6:9). நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் நாம் மறந்துவிடவேகூடாது. தேவன் விரும்புகிற பலிகள் காளைகளல்ல, இவைகளே (எபி 13:16).

ஆசீர்வாதம் பத்திரிகையில் இந்தக் கருப்பொருள் தழுவிய பல கட்டுரைகளை இவ்வாண்டு படிப்போம். இருப்பினும் இப்போது நற்செயல்களைக் குறித்து இரண்டு முக்கியக் குறிப்புகளைத் தியானிக்கலாம்:-

### விசுவாசமும் செயல்களும்

அப்போஸ்தலன் யாக்கோபு இரண்டாம் அத்தியாயத்தில் 14-17 வசனங்களில் விசுவாசத்தோடு இணைந்து செயல்படும் நற்செயல்களை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

"என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், செயல்களில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், உடலுக்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் செயல்களில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும்."

விசுவாசி என்னும் போர்வைக்குள் ஒளிந்து கொண்டு ஒருவர் நற்செயல்களைச் செய்யாமலிருக்க முடியாது. ஒருவருக்கு இரக்கங்காட்ட மனதற்றவன் தான் ஒரு விசுவாசி என்று ஜம்பமடித்துக்கொள்வது வாய்ச்சாலம். நற்கிரியைகளில் நாம் நடக்கும்படிக்கு அவர் முன்னதாகவே அவைகளை ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார்.

### வளர்ச்சியும் செயல்களும்

குறைவாயிருந்தவைகளை ஒழுங்குபடுத்தும்படியாகவே பவுல் தீத்துவை கிரேத்தாத் தீவிலே விட்டு வந்தார் (தீத்து 1:5). அப்படி குறைவுபட்டவைகளில் ஒன்று நற்செயல்கள். பவுல் தீத்துவுக்கு எழுதின தனது கடிதத்தில் இதைத்தான் மறுபடியும் மறுபடியும் அழுத்திக் கூறுகிறார்.

1. உன்னை நற்செயல்களுக்கு மாதிரியாகக் காண்பி (2:7).
2. நற்செயல்களைச்செய்யப் பக்தி வைராக்கியமுள்ளவனாயிரு (2:14).
3. நற்செயல்களைச் செய்ய ஆயத்தமாயிரு (3:1).
4. நற்செயல்களைச் செய்யப்பழகி அதில் நிலைத்திரு (3:8,14).



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com

*பரிசுத்தாவியின் வரங்களை எப்படிச் செயல் படுத்துவது, விசுவாசத்தை எப்படிச் செயல் படுத்துவது, சத்துருவை எப்படித் தோற்கடிப்பது* போன்ற பல கருத்தரங்குகள் இன்று நமக்கு உண்டு. இவையெல்லாம் நமக்குத் தேவைதான். ஆனால், துக்ககரமாக, இயேசுவும் மற்றத் திருத் தூதுவரும் ஓங்கிப் பேசிய நற்செயல்களைக் குறித்தப் போதனை தேடினாலும் தென்பட வில்லையே. இதனால் விசுவாசிகளின் கண்கள் இவ்வேதபோதனைக்குக் குருடாகவே இருக் கின்றன. இயேசு தமது மலைப்பிரசங்கத்தில், "மனிதர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்று போதித்தார் (மத் 5:16).

கனியற்றவர்களாய்ப் போய்விடாதபடிக்கு, கிறிஸ்தவர்கள் நற்செயல்களைச் செய்யப் பழக வேண்டும். கடவுளை விசுவாசிக்கிற ஒவ்வொ ருவரும் நற்செயல்களில் தீவிரமாய் இருக்க வேண்டும். இவையே மனிதருக்கு நன்மையும் இலாபமும் பயக்கும்.

கடந்த ஆண்டை விண்ணபத்தின் ஆண் டென அறிவித்தோம். தமிழ்நாட்டிலும் பிற மாநிலங் களிலும் பல *மன்றாட்டு முகாம்கள்* நடத்தினோம். நமது தேசத்திற்காகவும் சபைகளுக்காகவும் மிஷனரிகளுக்காகவும் பங்காளர்களுக்காகவும் மன்றாடும்படியாக தேவன் தமது விண்ணபத் தின் ஆவியை ஊற்றினார். தேவன் நமது ஜெபங்களுக்கு பதிலாக, BYMஇன் பொற்கால ஆதிநிலை போன்ற ஒரு கையளவு மேகம் தென்படச் செய்துள்ளார். ஆண்டவர் வந்து நீதியை நம்மேல் மழையாய் வருஷிக்கப் பண்ணுமட்டும் அவரது பொற்பாதங்களைப் பற்றிக்கொள்வோம் (ஓசி 10:12). இப்போதையத் தேவை: முதலாவது ஜெபம், இரண்டாவது ஜெபம், மூன்றாவது ஜெபம். ஜெபமே ஜீவன், ஜெபம் ஜெயம். அதற்கு மாற்று வேறொன்றுமில்லை.

இவ்வாண்டு கூடுதல் தியாகம் செய்வோம், கூடுதல் உழைப்போம், கூடுதல் ஈடுபடுவோம், கூடுதல் பாடுபடுவோம். ஒருமனப்பாட்டோடும் குழு உணர்வோடும் அப்படிச்செய்வோமானால் கூடுதல் மகசூலை அனுபவிப்போம். *எழுப்புதலும் நற்செய்திப் பணியும்* என்கிற தரிசனம் நமது கண்களைவிட்டு அகலாதிருப்பதாக. எழுப்புத லானது வெடித்துச்சிதறும் நற்செய்திப் பணிக்கு நம்மை நடத்தும். நமக்குக் கொடுக்கப்பட்ட சிறு மந்தையைக்குறித்து தேவன் நம்மிடம் கணக்குக் கேட்பார். விழிப்புடன் அதைக் காத்துக்கொள் வோம் (எபி 13:17).

தமிழ்நாடு முக்கிய உறுப்பினர் கூடுகை நவம்பர் 12,13 கன்னியாகுமரியில் நடந்தது. தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 200 பேர் பங்கேற்றனர். பெண்கள் ஊழியத்தை உயிர்ப் பிக்கவும் பத்திரிகை வாசிப்போர் கூடுகை பல நடத்தவும் இலக்கிய விநியோகத் திட்டங்கள் (DEW 2012) பல அமுலாக்கவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இதன் மூலம் கிறிஸ்தவர்கள் சமநிலைப் போதனையினால் உயிர்ப்பிக்கப் படுவர்.

பலவிதமான நற்பணிகளைச் செயல்படுத் துவது குறித்து விரிவானத் திட்டங்கள் ஆலோசிக்கப்படுகின்றன. வரவிருக்கிற இதழ் களில் அவை வெளியாகும். நீங்கள் அவைகளில் தீவிரமாக ஈடுபடலாம்.

வருடாந்திர நமது ஒருங்கிணைப்பாளர் கூடுகை — மாநில ஒருங்கிணைப்பாளர், மாநிலத் துணை ஒருங்கிணைப்பாளர், பிராந்திய ஒருங்கி ணைப்பாளர்— டிசம்பர் 7–9 நடந்தது. இதில் ஊழிய செயல்திட்டங்களும், புதிய திட்டங்களும், களங்கள், புதிய ஊழியர் தேவை, சிறப்புப் பயிற்சிகள் போன்றவையும் தீர்மானிக்கப்பட்டன. இவ்வாண்டு கருப்பொருளை மனதில்கொண்டு பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டதால் இக்கூடுகை மிகப் பயனுள்ளதாய் இருந்தது.




தேவன் நம் மத்தியில் அசைவாடிக் கொண்டிருக் கிறார். அவர் வரும்போது நமது நற்செயல் களுக்குப் பல னருளுவார் (வெளி 22 : 12).

ஒரேயொரு நற்செயல்கூட உலகத்தைத் தொட்டுவிடும்.

2012 நற்செயல்கள் நிறைந்த புத்தாண்டாக இருக்கட்டும் என்று உங்களை வாழ்த்துகிறேன்! ❐



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com

# கிறிஸ்தவமே தானதர்மம்தான் !

*R. ஸ்டான்லி*

கிறிஸ்தவமே தானதர்மம்தான்!

இதுபோன்றதொரு கூற்றை இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் நான் கேட்டிருந்தால் இது ஒரு துர்வுபதேசமென்று கடுமையாய் எதிர்த் திருப்பேன். ஆனால் அடுத்தடுத்து எனது கண்களில் கடவுளின் தொடுதலைப் பெற்று வருவதால் இக்கூற்று முழுக்க முழுக்க வேதத்தின்படியானதே என உணரத் துவங்கியுள்ளேன். என்னைத் தவறாய்ப் புரிந்து கொள்ள வேண்டாம். “தானதர்மமே கிறிஸ்தவம்” என்று நான் சொல்லவில்லை; “கிறிஸ்தவமே தானதர்மம்” என்றுதான் சொல்லுகிறேன்.

தனது நிருபத்தில் அப்போஸ்தலன் யோவான் எழுதியதின் அடிப்படையில் (1 யோ 4:7-21), ஜெரமி டெய்லர் எனும் பக்தன், ‘‘கடவுள்தாமே அன்பாயிருக்கிறார்; எனவே நமக்குள் குடிகொண்டிருக்கும் தானதர்ம உணர்வு ஒவ்வொன்றும் தெய்வீக சுபாவத்தில் நமது பங்கேற்பாகும்’’ என்றார். அதே பாணியில் லேட்டிமர் என்ற வேதப் பண்டிதர், ‘‘கிறிஸ்துவின் இதயத் துடிப்பே தானதர்மம்தான்’’ என்றார். புனிதமான பக்திக்கு அப்போஸ்தலன் யாக்கோபு தரும் வரையறை இதோ: ‘‘அனாதைகளும் விதவைகளும் அனுபவிக்கும் துன்பத்தில் அவர்களைக் கவனித்தலும், உலகத்தால் கறைபடாதபடி தன்னைக் காத்துக்கொள்ளுதலும்’’ (யாக் 1:27). மட்டுமல்ல, தானதர்மச் செயல்களில்லாத விசுவாசம் செத்தது என்றும் அவர் வாதாடினார் (யாக் 2:14-20). தமது மக்களிடம் ஆண்டவர் அடிப்படையாக எதிர்பார்ப்பது ‘‘இரக்கம் கொள்வதில் நாட்டமே’’ என்று பின்வாங்கிப்போன இஸ்ரவேல் மக்களுக்குத் தீர்க்கன் மீகா நினைப்பூட்டினார் (மீகா 6:8). விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய மூன்று பிரதான குணநலன்களில் அன்பே பெரியதாம்! (1 கொரி 13:13).

இன்றைய சராசரிக் கிறிஸ்தவன் எவனுக்கும் ஆன்மீகப் பயிற்சிகளைக் குறித்துப் போதுமானதற்கும் மேல் போதனை கிடைக்கிறது. ஆனால் அவனது சமூகக் கடமைகளைக் குறித்து அவன் சவால் பெறுவதில்லை. ஆன்மீகப் பயிற்சிகளும் சமூகக் கடமைகளும் சரிசமமான முக்கியத்துவம் வாய்ந்தவை. கடவுளை முழு இருதயத்தோடு நேசிக்கவேண்டுமென்ற முதலும் பெரிதுமான கட்டளையைப் போலவே நமது அயலகத்தாரை நேசிக்கவேண்டுமென்ற கட்டளையும் முக்கியமானது (மத் 22:37-39). நமக்கு அயலான் யார் என்பதை விளக்க இயேசு நல்ல சமாரியன் கதையைச் சொன்னார் (லூக் 10:29-37). நமது அயலானை நேசிக்கவேண்டுமென்பது ‘‘இரண்டாம்’’ கட்டளையாய்ச் சொல்லப்பட்டிருகிறதென்பதால் அது முக்கியத்துவத்தில் ‘‘இரண்டாந்தரமானதாய்’’ ஆகிவிடாது. திருச்சட்டம் மற்றும் தீர்க்கதரிசனம் முழுமையும் இவ்விரு கட்டளைகளுக்குள்ளேயே அடங்கியிருக்கின்றனவென்று இயேசு கூறியபோது, ஒன்றில்லாது அடுத்ததில்லை என்றும் ஒன்றைப் புறக்கணித்தால் நாம் சமநிலை இழந்துவிடுவோம் என்றும் நாம் புரிந்துகொள்ளவேண்டுமென்றே அவர் எதிர்பார்த்தார் (மத் 22:40). நாணயத்தின் மறுபக்கத்தைப் பார்க்கத் தவறுவதே கிறிஸ்தவத்தின் வலிமைக் குறைவுக்கு முதற் காரணம்.

கிறிஸ்தவ வாழ்வு மற்றும் பணியின் அடிப்படையான ஏழு ஆன்மீகப் பயிற்சிகளைத் தானதர்மத்தோடு அவை எப்படிச் சம்பந்தப்பட்டவை என ஆராய்ந்து படிப்போம்.

## *1. மனந்திரும்புதலும் தானதர்மமும்*

மனந்திரும்புதல்தான் கிறிஸ்துவின் மூலவுபதேசங்களில் முதலானதாகையால் அதில் துவங்குகிறோம் (எபி 6:1). திருமுழுக்கினன் யோவானை மனந்திரும்புதல் பிரசங்கியாகப் புதிய ஏற்பாட்டின் ஆரம்பப் பக்கங்கள் அறிமுகப்படுத்துகின்றன. “மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள்’’ (அதாவது, மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்) என அவர் திரள்களுக்குமுன் முழங்கியபோது, மக்கள் அவரைப் பார்த்து, ‘‘அப்படியானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும்?’’ என்று வினவினர். அவர்களை உலுக்கிய அவரது உடனடிப் பதில்: ‘‘இரண்டு ஆடைகளை உடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கட்டும்; ஆகாரம் உடையவனும் அப்படியே செய்யட்டும்!’’ (லூக் 3:8-11). ஒப்புக்கொடுத்தலுக்கான அழைப்பிற்கு முன்வருபவர்களுக்கு இன்றையச் சுவிசேஷகர் எவரும் இப்படிப் பதில் கொடுப்பாரா? உடையில்லாதோரை உடுத்துவிக்கவும் உணவில்லாதோருக்கு உணவளிக்கவும் நமது சுவிசேஷச் செய்திகளில் அழைப்பே கிடையாது. மனந்திரும்புதலென்றாலே சினிமா, சிகரெட், குடி இப்படிப்பட்டவைகளை விட்டுவிடுவதென்றே மக்கள் புரிந்திருக்கிறார்கள். தற்பரிசோதனைக் கேள்விப்பட்டியல்களிலும் தானதர்மத்தைப் பற்றிப் பேச்சில்லை. செய்யத் தகாதவைகள் எனும்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com

பாவங்களை அளவுக்குமீறிக் கண்டனம்பண்ணி, செய்யத் தவறியவைகள் எனும் பாவங்களை அறவே கவனியாது விட்டுவிட்டோம். ஆனால் ஆங்கிலிக்கன் திருச்சபையின் ஜெபப் புத்தகத்திலுள்ள பொதுவான பாவ அறிக்கையில் செய்யத் தவறியவைகளெனும் பாவங்களே முதலாவது குறிப்பிடப்பட்டுள்ளன: ‘‘செய்யத்தக்கவைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவைகளையே செய்து வந்தோம்.’’

யுகங்களின் அடிப்படையில் யோவான் ஸ்நானனின் உபதேசம் நமக்குரியதல்லவென்று அதைத் தள்ளிவிட முடியாது. ‘‘யோவான் வரைக்கும்’’ பழைய உடன் படிக்கையின் சத்தம் ஒலித்தது; புதிய உடன்படிக்கை கிறிஸ்துவின் மரணத்திற்குப்பின் அமுலுக்கு வந்தது (மத் 11:13;26:28). எனவே யோவான் இரு உடன் படிக்கைகளுக்கும் ஓர்இணைப்புபோல் இரு உடன் படிக்கைகளுக்கும் இடைக்காலத் தீர்க்கதரிசியாய்ச் செயல்பட்டார். தானதர்மத்திற்கான அழைப்பை மனந் திரும்புதலின் செய்தியிலிருந்து எக்காலத்திலும் பிரிக்கமுடியாதென்பதற்கு இதோ சில எடுத்துக் காட்டுகள்—

யோபுவைப் போல நீதிமான் மண்ணுலகில் ஒருவனுமில்லையெனக் கடவுள் அவரைக்குறித்துச் சாட்சியிட்டார் (யோபு 1:8). தனது வாழ்வில் நீதி நெறியைச் செயலாற்றிய விதத்தை அவர் இவ்விதம் விளக்குகிறார்: ‘‘நீதியை அணிந்தேன்; அது என் ஆடையாயிற்று; நியாயம் எனக்கு மேலாடையும் பாகையும் ஆயிற்று... கதறிய ஏழையையும், அனாதைப் பிள்ளையையும், உதவியற்றவனையும் காப்பாற் றினேன்... விதவையின் உள்ளத்தைக் களிப்பால் பாடச் செய்தேன்... நான் குருடனுக்குக் கண்ணும் சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன். ஏழைகளுக்கு நான் தந்தையாக இருந்தேன்; அறிமுகமற்றோரின் வழக்குகளுக்காக வாதிட்டேன். கொடியவரின் பற்களை உடைத்தேன்; அவர்களின் பற்களுக்கு இரையானவரை விடுவித்தேன்’’ (யோபு 29:12-17).

மன்னன் நேபுகாத்நேச்சாருக்கு வரவிருந்த அழிவைக் குறித்த சொப்பனத்தை அவருக்கு விளக்கிச் சொன்ன பின்னர் தானியேல் அவரைப் பார்த்து, ‘‘அரசரே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் ஏற்றுக்கொண்டு நீதியைச் செய்து உமது பாவங்களையும், ஒடுக்கப்பட்டோருக்கு இரக்கம் காட்டி உமது அக்கிரமங்களையும் போக்கிக்கொள்ளும்’’ என்றார் (தானி 4:27). மனந்திரும்புதலின் முக்கிய அம்சமாகத் தானதர்மத்தைத் தீர்க்கதரிசி மன்ன ருக்குச் சுட்டிக்காட்டியது ஆச்சரியமாயில்லையா? அரசரின் வாழ்க்கைப் பாணியின் அடிப்படைக் கோளாற்றைத் தீர்க்கதரிசி தீர்க்கமாய்த் தெளிவு படுத்தினார்.

வியாதி என்னவென்று கண்டுபிடிப்பதே மருத்துவப் பணியில் முதற் படியாகும். மருத்துவரான லூக்கா தனது தொழிலறிவுக்கேற்ப இரு அதிகாரிகளின் வாழ்க்கையின் அவல நிலைக்கு வேரான காரணத் தைத் தனது சுவிசேஷத்தில் அழகாய் எடுத்துரைக் கிறார். ஒருவர் செல்வம் படைத்திருந்த இளம் வழக்கறிஞர். தனது சிறுவயது முதல் திருச்சட்டங்கள் யாவற்றையும் தான் கடைப்பிடித்துவந்ததாக அவர் பெருமையடித்துக் கொண்டபோது, இயேசு அவரைப் பார்த்து, ‘‘இன்னும் உம்மிடம் ஒரு குறையுண்டு; உமக்குள்ள யாவற்றையும் விற்றுத் தரித்திரருக்குக் கொடும்... பின்பு என்னைப் பின்பற்றி வாரும்’’ என்றார் (லூக் 18:18-22). அவர் ‘‘மிகவும்’’ துக்கமடைந் தார்; ஏனெனில் அவர் ‘‘மிகுந்த’’ செல்வம் உடையவராயிருந்தார்! (வச 23). அடுத்த அத்தி யாயத்திலேயே சகேயுவை லூக்கா அறிமுகப் படுத்துகிறார். ‘‘ஆண்டவரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன்’’ என்று அவர் இயேசுவிடம் சொன்னபோதுதான் அவர் அவரிடம், ‘‘இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது’’ என்று சொல்லி அவரை ஆசீர்வதித்தார் (லூக் 19:8,9).

## *2. ஜெபமும் தானதர்மமும்*

ஜெபங்கள் பதிலளிக்கப்படாததற்குக் காரணங் களைக் கூறும்போது ஏசாயா 1:15ஐக் குறிப்பிட நாம் தவறுவதில்லை. ‘‘நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களைவிட்டு மறைக் கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தக் கறையால் நிறைந்திருக்கின்றன.’’ இதையடுத்து, நமது பாவங்கள் கடுஞ்சிவப்பாயிருந்தாலும் கடவுள் அவற்றை மன்னிக்க அருளியுள்ள வாக்குத்தத்தம் சொல்லப் பட்டுள்ள 18ஆம் வசனத்திற்குச் சென்றுவிடுவோம். 15ஆம் வசனத்தை வாசித்துவிட்டு கடவுளின் முகத்தை மறைக்கும் நமது பாவங்கள் பட்டியலிடப் பட்டுள்ள 16ஆம் 17ஆம் வசனங்களைக் கவனியாது 18ஆம் வசனத்திற்குத் தாவிவிடுவதே நமது தவறு. தமது மக்களின் துர்ச்செயல்களைச் சுட்டிக்காட்டிய பின்னர் கடவுள் அவர்களை, ‘‘நன்மை செய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட் டவனை ஆதரித்து, திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும் விதவையின் வழக்கையும் விசாரி யுங்கள்’’ என்று கூவியழைக்கிறார். ஜெபக் கூட்டங்களும் ஜெப முகாம்களும் பெருகிவரு வதைக் குறித்து நாம் மகிழ்ந்தாலும், தான தர்மத்தைக் குறித்துப் பேச்சே இல்லையே என்பது நம்மை மனமடிவாக்கவேண்டும். ‘‘மிகுதியாய்’’ ஜெபம்பண்ணினாலும் ‘‘கொஞ்சமாய்த்தான்’’ பதில் பெறுகிறோம். ஏழைகளுக்காய்ப் போராடி அவர் களுக்கு நீதி நியாயம் கிடைக்க உழைப்பதே



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com

இந்நிலைக்குப் பரிகாரமாகலாம். வினோதமாய்த் தெரிகிறதோ ? அதுதான் வேதம் !

மலைப்பிரசங்கத்திற்கு நிகரில்லை. அதின் சாராம்சம் மட்டுமல்ல, பிரசங்க மன்னராகிய நமதாண்டவர் சத்தியங்களைக் குறிப்பிட்டுள்ள வரிசைக் கிரமமும் நமது கவனத்திற்குரியது. ஆன்மீகப் பயிற்சிகளின் துர்ப்பிரயோகங்களைக் கண்டித்துக்கொண்டிருக்கையில் கர்த்தர் இயேசு முதலாவது தானதர்மத்தையும் அதற்குப் பின்னரே ஜெபத்தையும், உபவாசத்தையும் குறித்துப் பேசு கிறார் (மத் 6:1-4,5-8). இதற்குக் காரணமில்லா மலில்லை. ஜெபமென்பது விண்ணகத் தந்தையை நோக்கிய பாச மொழியாகுமானால், தானதர்மமென்பது மண்ணுலகத் தரித்திரரை நோக்கிய பரிவு மொழி யாகும். ''கண்கண்ட சகோதரனிடம் அன்பு செலுத்தா தவன் கண்காணாத கடவுளிடம் எப்படி அன்பு செலுத்துவான் ?'' (1 யோ 4:20). வேதம் கூறும் கடவுள் ஏழைகளின் தேவன் (நீதி 14:31). இறைவனின் இதயத்தை உடைப்பது நமது இதயத்தையும் உடைக்காவிடில், அவரது இதய பாரத்தை நாம் ஜெபத்தில் பகிர்ந்துகொள்ளமுடியாது.

விதவைகளின் வீடுகளை விழுங்கி நீண்ட ஜெபம் பண்ணுவதாய் நடித்த அக்காலத்துப் பரிசேயரை இயேசு கடுமையாய்க் கண்டனம்பண்ணினார் (மத் 23:14). இன்றும் நிலைமை அதுதான். அநேகமாக காணிக்கையிலேயே கவனங்கொண்டு அநேக விதவைகளுக்காகவும் உதவியற்றோருக்காகவும் அநேக ஜெபங்களைப் பண்ணும் பிரசங்கிமார் அநேகர்.

தானதர்மமானது நமது ஜெபங்களை எவ்விதம் கடவுளுக்குமுன் சுகந்த வாசனையாக்குகிற தென்பதைக் கொர்நெலியுவின் சரிதை அழகாய்ச் சித்தரிக்கிறது. அவன் புறவினத்தாரிலேயே முதல் விசுவாசி என்பது மட்டுமல்ல, அப்போஸ்தலர்கள் அவருக்காக ஜெபிக்கவோ அவர்மீது கைகளை வைப்பதற்கோ முன்னர் பரிசுத்த ஆவியைப் பெற்றவரும்கூட (அப் 10:44). அவரைக் குறித்து ''மக்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது (வச 2). விண்ணுலகிலிருந்து அவருக்குத் தூதன் கொண்டுவந்த செய்தியாவது: ''உம் ஜெபங்களும் உம் தருமங்களும் கடவுளுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கின்றன'' (வச 4).

ஓர் இக்கட்டான சூழல் உருவாகி, உங்கள் ஜெபங்கள் கேட்கப்படாத நிலையிருக்குமானால், உடனே ஒவ்வொரு ஊழியராய்த் தரிசனம் காணச் செல்லுவதை நிறுத்தி, நீங்கள் புறப்பட்டுப்போய் ஓர் ஏழை, ஒரு விதவை, ஓர் அனாதை, அல்லது ஒதுக்கப்பட்டுக் கைவிடப்பட்டவர் ஒருவருக்கு உதவிசெய்யுங்கள். நீங்கள் எதிர்பார்க்கிறதற்கும் முன்னதாக உங்கள் ஜெபங்களுக்குப் பரத்திலிருந்து பதில் வந்துவிடும் !

## *3. துதியும் தானதர்மமும்*

தொழுகைதான் கிறிஸ்தவப் பணிவிடைகளி லெல்லாம் மகுடமானது. எனவேதான் விண்ணகத்தில் இடைவிடாது நடப்பது துதியும் தொழுகையுமாகும் (வெளி 4:8-11). ஆனால் கடவுளின் மக்கள் மண்ணுல கிற்கு எப்பயனுமில்லாத அளவு விண்ணுலகச் சிந்தையிலேயே பறந்துசென்று கொண்டிருக்கக்கூடிய அபாய நிலை குறித்து அவர்களை எபிரெய நிருப ஆக்கியோன் எச்சரித்தார். கரிசனையோடு அவர் எழுதியதைக் கவனியுங்கள் : ''ஸ்தோத்திர பலியை இயேசு மூலம் எப்போதும் கடவுளுக்குச் செலுத் துவோமாக. **அன்றியும்** நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இவ்வகைப் பலிகள்மேல் கடவுள் பிரியமாயிருக்கிறார்'' (எபி 13:15,16).

ஆலயத்தின் நான்கு சுவர்களுக்குள்ளிருந்து ஆரவாரமாய்த் தொழுதுகொண்டிருக்கும் அதே வேளையில் வெளியே வருந்தி மடிந்துகொண்டிருக்கும் ஏழை எளியவரின் கதறல்களைக் கவனியாதிருக்க ஏராளம் வாய்ப்புண்டு. ''கடவுளைப்'' பிரியப்படுத்த அல்ல, ''நம்மையே'' பரவசப்படுத்த நவீன கால ஆராதனைகளில் மறைந்திருக்கும் ஆபத்து நிறைய வுண்டு. நாம் உற்சாகமடைவதைவிட கடவுளை உவகை அடையச் செய்வதே ஆராதிப்பதில் நமது நோக்கமாயிருந்தால் சமுதாயத்திலுள்ள ஏழை எளியவருக்கான அவரது அன்பில் பங்கேற்பது இயல்பான விளைவாகிறது.

தொழுகையென்பது ஒரு பரவச அனுபவந்தான். துதியெனும் தைலத்தின் அபிஷேகம் நம்மை உன்னதங்களுக்கு எடுத்துச்செல்லும். அகிலவுலகப் பிரசித்திபெற்ற சுவிசேஷகர் ஒருவரிடம் அவரது சபைப் பின்னணி எதுவென்று நான் கேட்டபோது அவர், ''நான் பெந்தெகொஸ்தேகாரன்தான், ஆனால் கால்கள் இரண்டும் தரையில்தான்'' எனப் பதிலளித்தார். பரவச மூட்டும் ஆன்மீக அனுபவங்கள் நம்மை நடைமுறைக் காரியங்களிலிருந்து துண்டித்துவிடக்கூடாது என்பதே இந்த முதிர்ந்த தேவ மனிதன் என்னிதயத்தில் பதிக்க விரும்பியதாகும். அவர் கொடுத்த நகைச்சுவையான பதிலை நினைத்துச் சிரித்துக்கொண்டே வீடு திரும்பியபோது திடீரென ஏசாயா 66:1 என் நினைவுக்கு வந்தது. கடவுள் விண்ணுலகச் சிங்கா



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com

சனத்தில் அமர்ந்திருந்தாலும் அவரது பாதங்கள் மண்ணுலகில்தான் இருக்கின்றனவாம்! ஹா... ஹா!

புதிய இசைக்கருவி ஒன்று வாங்குவதற்கோ ஒலி பெருக்கி அமைப்பை நவீனமாக்கவோ பணம் செலவழிப்பது சரிதான். ஆனால் ஏழைகளை ஆசீர்வதித்து அவர்களது "உள்ளத்தைக் களிப்பால் பாடச் செய்வதற்காய்" நமது சபை பட்ஜெட்டில் தாராளமாய்ப் பணம் ஒதுக்க மறந்துவிடக்கூடாது (யோபு 29:13).

சொல்லப்போனால், நாம் ஏழைகளை ஆதரிக்கும் போது கர்த்தரையே ஆராதிக்கிறோம்! எருசலேமிலுள்ள ஏழை விசுவாசிகளுக்காய்ப் பணம் சேகரிப்பதைக் குறித்து கொரிந்து சபையினருக்கு எழுதும்போது அப்போஸ்தலன் பவுல் இச்சத்தியத்தை வெளிப்படுத்துகிறார்: "இந்தத் தர்ம சகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனை ஸ்தோத்தரிப் பதினால் சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்... தங்களுக்கும் மற்ற அனைவருக்கும் நீங்கள் உதாரத்துவமாய்த் தர்மஞ்செய்கிறதினால் அவர்கள் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்" (2 கொரி 9:11-13). "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" எனும் உச்சத் தொனியில் அப்போஸ்தலன் இவ்வத்தியாயத்தை முடிக்கிறார் (வச 15). வேறு வார்த்தைகளில் சொன்னால், நாம் நம்மால் முடிந்த உச்ச அளவில் எளியவருக்குக் கொடுக்கும் போதும், நாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொண் டவைகளோடு அதை ஒப்பிட்டால் அது துச்சமே!

பிரிய வாசக நண்பரே, வேதத்திலில்லாத ஒன்றை ஏதோ கற்பனை செய்து நான் ஒரு புதிய உபதேசத்தைக் கண்டுபிடிக்கவில்லையென்பதைத் தயவுசெய்து மனதிற்கொள்ளுங்கள். மாறாக, பரிசுத்த வேதத்தில் மறைந்து கிடக்கும், அதே வேளையில் வசதியாக மறக்கப்பட்டதொரு, சத்தியத்தையே தோண்டியெடுக் கிறேன். அப்பப்பா, அப்போஸ்தலர் 2:4இல் மட்டும் எத்தனை பிரசங்கங்கள்! ("அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வாக்கின்படியே வெவ்வேறு மொழிகளிலே பேசத் தொடங்கினார்கள்"). அப்போஸ்தலர் 2:44ஐப் பற்றியென்ன? ("விசுவாசிக ளெல்லாரும் ஒருமித்திருந்து எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்"). ஆயிரம் கிறிஸ்தவர்கள் ஓர் அரங்கத்தில் கூடிவந்து அன்னிய பாஷைகளில் ஆர்ப்பரிக்கட்டும். சுற்றியுள்ள உலகம் இது ஒரு வேடிக்கையென்று கவனியாது விட்டுவிடும். ஆனால் அவர்களில் நூறுபேர் எளியதொரு வாழ்க்கை முறையை மேற்கொண்டு தங்கள் உடைமைகளை இல்லாதாரோடு பகிர்ந்துகொள்ளட்டும் — இவ்வித அசாதாரண அன்பின் ஆழமான பாதிப்பைச் சமுதாயம் கண்டும் காணாமலும் இருக்கமுடியாது. தானதர்மச் செயல்களுக்கு எந்த மொழியாக்கமும் தேவை யில்லை! அன்பின் ஆவியானவரின் அபிஷேகத்திற்கு அப்போஸ்தலர் 2:4ஐ விட அப்போஸ்தலர் 2:44 மறுக்கமுடியா அடையாளமாகும்!

## *4. காணிக்கையும் தானதர்மமும்*

தசமபாகம் என்பது புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்த வருக்கு ஒரு கட்டாயப் பிரமாணமில்லையெனினும், அது ஒழுங்கும் பக்தியுமானதொரு ஆன்மீகப் பழக்கமாகும். ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளென்றல்ல, கர்த்தருடைய நாளென்று அழைப்பது போல், கர்த்தருக்கென்று எடுத்துவைக்கும் பணத்தைத் "தசமபாகம்" என்றல்ல, கர்த்தரின் பணம் என்றே அழைக்க விரும்புகிறேன். இப்பொழுது கேள்வியென்னவென்றால், குடும்பத்திலோ சபை யிலோ கர்த்தருக்கென்று நாம் எடுத்துவைக்கும் தொகையில் எவ்வளவு ஏழைகளுக்குச் செல்ல வேண்டும் என்பதே. எளியவருக்காய்ச் செலவழிக்கும் எதுவும் எவ்விதத்திலும் "ஆன்மீகக்" காரியங் களுக்காய்ச் செலவழிப்பதைவிடக் குறைந்த மதிப்புள் ளதல்ல. ஏழைகளுக்கு இரங்குவதே கர்த்தருக்குக் கொடுக்கும் கடன்தானே! (நீதி 19:17).

இங்குதான் இயேசுவின் காலத்துப் பரிசேயரும் வேதபாரகரும் தவறினர். "மார்க்க" சம்பந்தமான காரியங்களுக்குத் தசமபாகம் கொடுப்பதில் கண்ணும்கருத்துமாயிருந்த அவர்கள் எளியோரையோ மறந்துவிட்டனர். இவர்கள்மீது "ஐயோ" எனக் கூறிய ஆண்டவர் ஏழைகளுக்கு "நியாயமும் இரக்கமும்" செய்து "நம்பகமாய்" நடந்துகொள்வது சட்டமாய்த் தசமபாகம் கொடுப்பதைவிட "விசேஷித்தது" எனக் குறிப்பிட்டு அவர்களை அதிரச் செய்தார் (மத் 23:23). இப்போதனையைச் செரிப்பது நமக்குக் கடினமாயி ருக்கிறதோ? அப்படியானால் நாம்தான் இன்றையப் பரிசேயர்!

சபைக்குத் தசமபாகம் கொடுப்பதை உபதேசிக்க மல்கியா 3:10ஐ மேற்கோள் காட்டும் நாம் நிலமற்ற லேவியரையும், உதவியற்ற அந்நியரையும், அனாதை களையும், விதவைகளையும் பராமரிக்கத் தங்கள் விளைச்சலின் (வியாபாரம் அல்லது வேலை) தசமபாகத்தைக் கொடுக்கும்படிக் கடவுள் கட்டளையிட்டிருக்கிற உபாகமம் 14:28,29ஐயும் மறந்துவிடக்கூடாது. தமது சுற்றுப்பயண ஊழியத் திற்காக இயேசுவுக்குப் பணத்தேவைகள் இருந் திருந்தாலும், அவரும் அவரது சீடரும் ஏழைகளுக்கு எடுத்துக்கொடுப்பதற்காக ஒரு தனிப் பணப்பை வைத்திருந்தனர் (யோ 12:5,6; 13:29).



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com

ஏழைகளுக்கு எவ்வளவுதான் கொடுக்கவேண்டுமென்று இன்னும் ஒரு கேள்வி எழலாம். திருமுழுக்கினன் யோவானையும் சகேயுவையும் உயிரோடெழுப்பிக் கேட்டால் "பாதி" என்று சொல்லிவிடுவார்கள்! (லூக் 3:11; 19:8). அப்போஸ்தலன் பவுல் எளியவருக்குப் "பெருக... உற்சாகமாய்... உதாரத்துவமாய்... தாராளமாய்க்" கொடுக்கவேண்டும் என்பார் (2 கொரி 9:6,7,13; 1 தீமோ 6:18). ஏறத்தாழ எல்லாச் சபைகளுமே காணிக்கை உறைகள் மீது *"உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்"* என்ற வசனத்தை அச்சடிக்கின்றன. ஆனால் இவ்வசனம் சொல்லப்பட்ட சந்தர்ப்பம் எளியவருக்காய்ப் பணம் திரட்டுவதையடுத்தது என நாமறிவோமோ? (2 கொரி 9).

எளியவருக்கு நமது இரக்கமின்மையைக் கடவுள் எவ்வளவு கோபத்துடன் பார்க்கிறாரென்பது அனனியா-சப்பீராள் தம்பதியரின் சடுதி மரணத்திலிருந்து தெளிவாகிறது (அப் 5:5,10). அப்போஸ்தலர் பாதத்தில் அவர்கள் வைக்கப்போகும் பணம் யாவும் ஏழை எளியவருக்கே சென்றுவிடுமென்று அவர்கள் நன்கறிந்திருந்தனர் (அப் 4:34,35). ஏழைகள் உயர்த்தப்பட்டு, சபையில் எல்லாருக்கும் ஒரே அந்தஸ்து கிடைத்து, தங்களுக்கு இனிமேல் ஆலயத்தில் சிறப்பாக தனி நாற்காலிகள் கிடைக்காது என்ற சூழ்நிலையையெல்லாம் அவர்களால் கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை போலும்! (யாக் 2:2-4). ஏழைகளுக்குச் சாதகமான யோவான் ஸ்நானனின் செய்தி கனியற்ற மரங்கள் வெட்டப்பட்டு எரிக்கப்படுமென எச்சரித்திருந்தது (லூக் 3:9-11). அவ்விதமே, மண்ணுக்குப் பாரமாயிருந்த கனியற்ற மரங்களாகிய அனனியாவும் சப்பீராளும் வெட்டி வீழ்த்தப்பட்டனர்!

### *5. உபவாசமும் தானதர்மமும்*

பழைய ஏற்பாட்டில் உபவாசத்தைக் குறித்த விரிவான பகுதி ஒன்று ஏசாயா 58இல் உண்டு. சர்வவல்லவராகிய ஆண்டவரிடமிருந்து துருவி ஆராயும் இரு கேள்விகள் இப்பகுதியிலுண்டு: "இதையா உபவாசம் என்று சொல்லுவாய்?" "இது அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்?" (வச 5,6). அதாவது இப்பகுதியில் தேவன் தவறான முறையில் உபவாசிப்பதற்காய்த் தமது மக்களைக் கடிந்துகொண்டு தமக்குப் பிரியமாய் உபவாசிக்கக் கற்றுக்கொடுக்கிறார்.

தங்கள் ஜெப தியான வாழ்வில் மக்கள் அதிக உன்னிப்பாயிருந்தனர். தினமும் ஜெபித்தனர், திருவசனத்தை மகிழ்வுடன் தியானித்தனர், கடவுளின் திருச்சட்டங்களின்படி நடக்க முழு முயற்சியெடுத்தனர் (ஏசா 58:2). தங்கள் உபவாச நாட்களில் இரட்டுடுத்தி சாம்பலில் உட்கார்ந்தனர். அவர்கள் சாப்பிடவும் குடிக்கவுமில்லையென்பது தெளிவு. அதனால் முகம் வாடியும் காணப்பட்டனர் (வச 5). தங்கள் ஆத்துமாவை ஒடுக்கும் பயிற்சியாகவே உபவாசத்தை அவர்கள் புரிந்திருந்தனர் (வச 3,5). அவர்கள் செய்தவைகளில் தவறேதுமில்லை; ஆனால் யாவும் தன்னலத்திற்காகவே செய்யப்பட்டன. கடவுளின் ஆமோதிப்பைவிட மக்களின் பாராட்டே அவர்களது நாட்டம் (வச 3,4). இன்னும் மோசமான காரியம் என்னவென்றால், தங்களது உபவாச நாட்களில்கூட அவர்கள் தங்கள் கூலிக்காரர்களை வாட்டிவதைத்தனர் (வச 3,4).

தவறாய் உபவாசிப்பதைக் குறித்துத் தமது மக்களைக் கடிந்துகொண்ட ஆண்டவர் உபவாசம் எனும் பயிற்சி உள்ளடக்கவேண்டிய காரியங்களை வரிசைப்படுத்தினார்: 1. கொடுமையின் கட்டுகளை அவிழ்ப்பது; 2. நுகத்தின் பிணையல்களை அறுப்பது; 3. ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவது; 4. எவ்வகை நுகத்தையும் உடைப்பது; 5. பசித்தோருக்கு உணவைப் பகிர்ந்து கொடுப்பது; 6. தங்க இடமில்லா வறியோரை இல்லத்திற்கு அழைத்துவருவது; 7. உடையற்றோருக்கு உடுக்கக் கொடுப்பது (ஏசா 58:6,7). இவ்வேழு இரக்கச் செயல்களையும் "உன்(னைப் போன்ற) மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருப்பது" என்ற ஒரே வாக்கியத்தில் அடக்கலாம். அதாவது, நமது சக மனிதருக்குச் செய்யவேண்டிய கருணைச் செயல்களை உள்ளடக்கும்போதுதான் நமது நோன்பு இறைவனுக்குமுன் அங்கீகாரம் பெறுகிறது. நமது விருப்பங்களையும் இன்பங்களையும் ஒதுக்கிவைத்து (அல்லது உபவாசித்து) அதினால் தியாகச் சிந்தையுடன் பாவப்பட்டோருக்கும் தேவைப்பட்டோருக்கும் உதவ நம்மை இயேசு அழைக்கிறார். ஏதோ ஓரிரு வேளை சாப்பிடாமல் இருந்துவிடுவது முழுமையான உபவாசமல்ல. அது உபவாசத்தின் ஓர் அம்சம்தான்.

உபவாசம் என்பது கிறிஸ்தவத்திற்கே உரியதென்றும் சொல்லமுடியாது. மற்ற மார்க்கங்களிலும் இப்பழக்கம் உண்டு. உடல் நலத்திற்காகவும் நோன்பு மேற்கொள்ளப்படுவதுண்டு. திருவசனத்தின்படியான உபவாசத்தின் தனிச்சிறப்பு என்னவென்றால் அது வசதியற்றோரை உயர்த்தும் செயலோடு சம்பந்தப்பட்டுள்ளதுதான். மருத்துவ உதவி மற்றும் நிவாரணப் பணிகள் மூலம் கிறிஸ்தவ மிஷனரிகள் மக்களை ஏமாற்றி மதமாற்றம் செய்கின்றனரென்ற சில இந்துமத வெறியர்களின் குற்றச்சாட்டிற்குப் பதில் கொடுக்கும் வகையில் ஓர் இந்து மேதையே இவ்விதம் கேட்டிருக்கிறார்: "இந்துக் கோயில் பூசாரிகளே,



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com

நீங்களும் ஏன் கிரஹாம் ஸ்டெயின்ஸ் போன்று தொழுநோயாளிகளைத் தொட்டுச் சிகிச்சையளித்து, அல்லது அன்னை தெரசா போன்று குப்பைத் தொட்டிகளிலிருந்து வேண்டாத குழந்தைகளைத் தூக்கியெடுத்துப் பராமரித்து மக்களை மதமாற்றம் செய்யக் கூடாது?'' ஆம், கிறிஸ்துவின் மனதுருக் கத்தை அதே சிந்தையின்றி காட்ட முடியாது!

அற்புத சுகத்திற்காக உபவாசித்தலைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் ''*சுகமடைய ஏழு படிகள்*'' என்றொரு கைப்பிரதியிலோ பிரசங்கத்திலோ தானதர்மம் ஏழிலொரு படியாகக்கூடச் சொல்லப்பட வில்லையே! வேதமோ தானதர்மத்தின் நேரடி விளைவாக உடல் சுகத்தைப் பல இடங்களில் வாக் களித்துள்ளது. எளியவருக்கு உதவும்படி சுய வெறுப்புடன் உபவாசம் மேற்கொண்டால், ''**அப் பொழுது** விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்'' (ஏசா 58:8). சங்கீதக்காரன் தாவீதின் கூற்றும் இதுவே: ''சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள் ளவன் பாக்கியவான்... படுக்கையில் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; நோய் நீங்கிப் படுக்கையினின்று அவன் எழும்பும்படிச் செய்வார்'' (சங் 41:1,3). மறக்கப்பட்ட சத்தியங்களைத் திருச்சபைக்குள் திரும்பக் கொண்டுவரத் தீர்க்க தரிசிகள் இங்குதான் நமக்குத் தேவை. நூற்றுக் கணக்கான பொது மருத்துவர்கள் கண்டுபிடிக்கத் தவறியவற்றைக் கண்டுபிடிக்கும் நிபுணர்களே இறைவனது தீர்க்கதரிசிகளாம்.

### *6. பிரசங்கிப்பதும் தானதர்மமும்*

கர்த்தருடைய ஆவியானவர் தம்மீது வந்த பிரதான நோக்கத்தை இயேசு சாட்சியாக அறிவித்தார்: ''தரித்திரருக்கு நற்செய்தியைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்... ஒடுக்கப்பட்டோரை விடுதலைசெய்து அனுப்பவும்... என்னை அனுப்பினார்'' (லூக் 4:18). இயேசுவின் மேசியா ஊழியத்தின் முடிவான அடையாளம் ''தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது'' என்பதே (லூக் 7:22).

துர்ப்பாக்கியமாக இவ்வசனங்களையும் நாம் எழுத்தின்படி எடுத்துக் கொள்ளாமல் இவைகளுக்கு ஆன்மீக அர்த்தம் கொடுத்துவிட்டோம். இங்கு எளிமை என்பது ஆவியில் எளிமையைக் குறிப்பிடவில்லை, அது பொருளாதார வறுமையையே சுட்டிக்காட் டுகிறது. ''தரித்திரர்'' என்றால் பரம ஏழைகள் எனப் பொருள். இயேசுவின் ஊழியம் கைவிடப்பட்டோரையும் தாழ்த்தப்பட்டோரையும் குறிவைத்தது. பரலோகத்தைத் தரித்திரர்கள் நிரப்புவார், துதியுங்கள்! (யாக் 2:5; 1 கொரி 1:27,28; மத் 19:23,24).

சுகமளிப்புக் கூட்டங்களுக்கான அழைப்பிதழ் களிலும் சுவரொட்டிகளிலும் லூக்கா 7:22 அச்சிடப்பட்டிருக்கும்: ''குருடர் காண்கிறார்கள், முடவர் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுகமடை கிறார்கள், செவிடர் கேட்கிறார்கள்!'' ''மரித்தோர் எழுந்திருக்கிறார்கள்'' என்பதை நாம் வசதியாக விட்டு விடுவோம்; ஏனெனில் சடலங்களை ஜெபிப்பதற்காகக் கொண்டுவாருங்கள் என்று சொல்ல நமக்குத் துணிச்சல் கிடையாது. ஆனால், ''தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது'' என்பதையும் விட்டதேனோ? நமது கூட்டங்களில் முன் வரிசை நாற்காலிகள் செல்வாக்குடையோராலேயே நிரப்பப்படவேண்டுமென்று விரும்புகிறோமோ? நண்பரே, கவனியுங்கள்! நமது சுகமளிப்புக் கூட்டங்களைப் பிச்சைக்காரர், தொழுநோயாளிகள், கைவிடப்பட்டோர் மற்றும் தள்ளப்பட்டோரால் நிரப்ப நாம் கற்கும்வரை எதிர்பார்க்கும் அளவு அற்புதங்கள் நடக்காது. அன்பில்லையேல் அற்புதமில்லை! உதவியற்றோர்மீதுள்ள மனதுருக்கத்தினாலேயே இயேசுவின் அற்புதங்களில் பெரும்பாலானவை நிகழ்ந்தன. எழுதப்பட்டுள்ளபடி இயேசுவின் முதல் சுகமளிப்பு அற்புதம் தெருவிலுள்ள தொழுநோயாளி ஒருவனுக்கும், திருச்சபையின் முதல் அற்புதம் ஒரு பிச்சைக்காரனுக்கும் செய்யப்பட்டன (மத் 8:1,2; அப் 3:2). இவையெல்லாம் காரணமில்லாதவையல்ல. தங்களது கூட்ட அழைப்பிதழ்களை ஆலய வாசல்களிலே வினியோகிக்காமல் தொழுநோய் மனைகள், பிச்சைக்காரர் குடியிருப்புகள், குருடர்-செவிடர்-ஊமையர் பள்ளிகள், ஊனமுற்றோர் மற்றும் மூளை வளர்ச்சி குன்றியோர் இல்லங்களிலும் சாலையோரவாசிகளுக்கும் வினியோகிக்கும்படி சுகமளிப்பு ஊழியரை வருந்திக் கேட்கிறேன். இப்படிப்பட்ட அவதியுறுவோர் இருக்குமிடங்களுக்கே சென்று அன்னாருக்கு ஜெபித்து ஊழியம் செய்வது இன்னும் மேல். அசாதாரணமானதைச் செய்தால்தான் அசாதாரணமானதைக் காணலாம்.

பேதுருவும் யாக்கோபும் யோவானும் இயேசுவின் சீடர் கூட்டத்தில் உள்வட்டத்தினர். மற்ற சீடரைக் காட்டிலும் அவர்களுக்குத் தங்கள் ஆண்டவரின் மனது கூடுதல் புரிந்திருக்குமென்பது தெளிவு. அவர்கள் ஆதிச்சபையில் ''தூண்களாகக்'' கருதப்பட்டார்கள். பவுலையும் பர்னபாவையும் யூதரல்லாதோருக்கு மிஷனரிகளாய் இத்தலைவர்கள் அனுப்பிவைத்தபோது சொன்னதெல்லாம், ''தரித் திரரை நினைத்துக் கொள்ளுங்கள்'' என்பதுதான். இதைக் கலாத்திய நாட்டுக் கிறிஸ்தவருக்குப் பவுல்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com

எழுதுகையில், ‘‘அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன்’’ எனக் குறிப்பிட்டான் (கலா 2:9.10). மேய்ப்பர்கள் அல்லது சுவிசேஷகர்கள் அல்லது மிஷனரிகளின் பிரதிஷ்டை ஆராதனைகளில் இவ்விதம் தரித்திரரை மறந்துவிடக் கூடாதென்ற குறிப்பான ஆலோசனை சொல்லப்படுகிறதாவென்பது எனக்குச் சந்தேகம். நமது ஊழியத் திட்டங்களின் முக்கியத்துவத்தைத் திரும்பச் சீராக வரிசைப்படுத்துவோம். ஊழல் நிறைந்த அரசியல்வாதிகள் மற்றும் வன இலாகா அதிகாரிகளின் ஏமாற்றங்களுக்குத் தப்பும்படி அறியாத ஆதிவாசிகளின் கண்கள் திறக்கப்படவேண்டும். திருட்டு வியாபாரிகள் மற்றும் இரக்கமற்ற ஜமீன்தார்களின் கொத்தடிமைகளாக அவதியுறும் வறியவர் இவ்வித நுகத்தடிகளிலிருந்து அவிழ்க்கப்படவேண்டும். தீண்டப்படாதோரெனும் வகுப்பினர் தாங்களும் கடவுளால் உண்டாக்கப்பட்ட மனிதர்தான் எனும் அறிவிற்குள்ளும் மதிப்பிற்குள்ளும் கொண்டுவரப்படவேண்டும். நற்செய்தியறிவிப்பானது இவ்விதத் துணிச்சலான இரக்கப் பணிகளை உள்ளடக்க வேண்டும். இல்லையேல் நுகம் முறிக்கும் அபிஷேகம் நமக்கெதற்கு ? (லூக் 4:18,19; ஏசா 10:27இ).

‘‘சமூக நலக் கண்ணோட்டம் இல்லாத ஆன்மீகச் சுவிசேஷம் உடலில்லாத உயிராகும்; ஆன்மீகச் சத்து இல்லாத சமூகநல சுவிசேஷம் உயிரற்ற உடலாகும். ஒன்று அலைந்து திரியும் ஆவி; அடுத்தது வெறும் சடலம்’’ என்றார் பண்டிதர் E. ஸ்டான்லி ஜோன்ஸ். கிறிஸ்தவமானது முக்கியமாக மூன்று நதிகளாய் ஓடுகிறது: பெந்தெகொஸ்தே சபை சாராத விசுவாசிகள், புராதன திருச்சபைக் கிறிஸ்தவர்கள், பெந்தெகொஸ்தே சபையினர். முதல் வகுப்பினராகிய பெந்தெகொஸ்தே சபை சாரா விசுவாசிகள் ‘‘வசனத்தில்’’ திடமானவர்கள். வேத வியாக்கியானங்கள், ஆராய்ச்சி வேதங்கள் மற்றும் வேதாகம ஆய்வுகளில் ஏறத்தாழ 75 சதவீதம் இவ்வகுப்பிலிருந்தே வெளிவருகிறது. புராதனச் சபையினர் பொதுவாகத் தானதர்மச் ‘‘செயல்களில்’’ வல்லவர்கள். அனாதை இல்லங்கள், கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள், நிவாரணப்பணித் திட்டங்கள் போன்றவை இவர்களது சாதனைகளுக்கு எடுத்துக்காட்டுகள். மூன்றாம் பிரிவாகிய பெந்தெகொஸ்தே சபையினர் இயல்பாகவே ‘‘அற்புத அடையாளங்களை’’ வற்புறுத்துவர். பவுலைக் கேட்டால் ‘‘பூரண சுவிசேஷம்’’ என்றால் ‘‘வார்த்தை... செய்கை... அற்புத அடையாளங்கள்’’ ஆகிய மூன்றும் பொருத்தமான விகிதத்தில் கலந்திருப்பதே என்பார் (ரோ 15:18,19). சபைப் பிரிவுகள் ஒன்றுக்கொன்று எவ்வளவாய்த் தேவை! ஒருவரது பலம் அடுத்தவரது பலமின்மையில் உதவும்.

## *7. இரண்டாம் வருகையும் தானதர்மமும்*

Y2K எனும் பிரச்னை குறித்துக் கணினிப் பொறியுலகம் வெகுவாய்க் கலங்கிக்கொண்டிருந்த வேளையில், கிறிஸ்தவர்களாகிய நாமோ நமது நேசரின் வருகையைக் களிப்புடன் எதிர்பார்த்து நின்றோம், நிற்கிறோம். ஆயினும், அவரது வருகையில் நாம் வெட்கப்பட்டுப்போகாதபடி, நமது நித்தியத்தை நிர்ணயிக்கும் முக்கிய காரியம் ஒன்றைக் கவனிக்கத் தவறிவிடக் கூடாது. அது தானதர்மத்தைப் பற்றியது. அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது செல்வந்தருக்குக் ‘‘கட்டளையிடு’’ என எச்சரித்ததிலிருந்து அதின் முக்கியத்துவம் தெளிவாகிறது: ‘‘அவர்கள் நன்மை செய்யவும், நற்செயல்களில் செல்வந்தர்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களாயிருக்கவும் கட்டளையிடு’’ (1 தீமோ 6:17-19).

ஆண்டவராகிய இயேசுவும் அவரது அப்போஸ்தலரும் பணக்காரர்மீது கடுமையாகவே இருந்தனர் எனப் புதிய ஏற்பாட்டில் எங்கும் காண்கிறோம். தங்களுக்கு அவ்வளவு பணமில்லையென்பதால் பணக்காரர்மீது அவர்கள் அவ்விதம் கண்டிப்பாயிருக்கவில்லை. மாறாக, இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளப்படவேண்டிய பணம் பதுக்கப்படுவதிலுள்ள அபாயத்தை அவர்கள் நன்குணர்ந்திருந்தார்கள். நமது தேவைக்குமேல் கடவுள் நமக்குக் கொடுப்பாரானால் அது தேவையிலுள்ளோருக்குக் கொடுப்பதற்காகவே. அளவுக்கு மீறிப் பணத்தைக் குவித்து வைப்பதிற்கெதிரான கடினமான எச்சரிப்பு ஒன்று யாக்கோபுவிடமிருந்து வருகிறது: ‘‘செல்வந்தரே, கேளுங்கள்: உங்களுக்கு வரப்போகும் இழிநிலையை நினைத்து அலறியழுங்கள்... உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்துவிட்டன. அந்தத் துருவே உங்களுக்கு எதிர்ச்சான்றாக இருக்கும்... இவ்வுலகில் நீங்கள் ஆடம்பரமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்... இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்’’ (யாக் 5:1-9). நித்திய நோக்குடன் நாம் வாழ்ந்தால் பணத்தைக் குறித்த நமது மனப்பான்மையே புரட்சிகரமாய் மாறிவிடும்.

ஏழை லாசரு மற்றும் அந்தச் செல்வந்தனின் கதையைக் கவனியாது இக்கட்டுரையை முடிப்பது நன்றன்று (லூக் 16:19-31). செய்யத் தவறியவை என்னும் பாவங்களே அச்செல்வந்தனை நரகத்தில் ஆழ்த்துவதற்குக் காரணமாயிருக்குமென அவன் கனவிலும் நினைத்திருக்க மாட்டான். அவனது சாப்பாட்டு மேசையிலிருந்து விழுந்த சோற்றுப் பருக்கைகளுக்காக ஏழை லாசருவோடு போட்டி போட்ட தனது நாய்களையாவது அவன் விரட்டியிருக்கலாம், அல்லது கட்டிவைத்திருக்கலாம். தனது தவற்றை அவன் உணர்ந்தது உண்மைதான்; ஆனால் காலம் பிந்திப்போயிற்றே! ❐

*www.StanleyOnBible.com*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com

# கிறிஸ்தவத் தெருச்சிறுவன்!



ஒரு தானியேல் எப்படித் தெருச்சிறுவனா யிருக்கமுடியும் ? எங்களால் நம்பவே முடியவில்லை. ஒடிசா பசிப்பிணி நிவாரணப் பணியின் செய்திமடல் எங்களை உலுக்கிவிட்டது. ஏழு வயது தானியேலுக்கு தகப்பன் மட்டும் இருந்தார். அவரும் அவனை விட்டுவிட்டு தன் வயிற்றைக் கழுவ ராய்பூர் சென்றுவிட்டார். பஞ்சம் சமயமாதலால் தன் மகனைத் தன் வயதான தாயிடம் விட்டுவிட்டு ராய்பூரில் ரிக்ஷா ஓட்டிப் பிழைத்தார். அவளால் அவனை கவனிக்க முடியாத நிலையில் அவன் பள்ளிக்குச் செல்லாமல், தெருக்களில் சுற்றிக்கொண்டு இருந்தான். அவர் களது வீடு கடும் மழையில் இடிந்து விட்டதால் இரவு யார் வீட்டுத் தாழ்வாரத்திலாவது படுத்து உறங்குவான்.

தானியேலைப்போல எத்தனையோ பிள்ளைகள் உண்டு. ஒருவனைப் பராமரித்து என்ன பயன் ? ஆனால் எங்கள் எண்ணங்கள் தானியேலையே சுற்றிச் சுற்றி வந்தன. எங்கள் வயதில் அவனை வளர்ப்பது சாத்தியமா? ஏழு வயதான தெருப்பையன் வீட்டு ஒழுங்கிற்கு வளைந்து வருவானா? சந்தே கங்கள் பல எழுந்தன. கணவனும் மனைவியுமாக ஜெபித்து முயற்சி எடுக்கத் தீர்மானித்தோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஒரு நாள் அவன் சேவிக்கும்படியாக அவனுக்குக் கல்வியறிவு கொடுத்து, அவன் காலிலேயே நிற்கப் பழக்குவதே எங்கள் நோக்கமாயிருந்தது.

ஆகவே ஒடிசா பசிப்பிணி நிவாரண அலுவலகத் திற்கு எழுதினோம். கந்தர்லா கிராமத்திலிருந்து சம்பல்பூருக்கு எங்களிடம் அச்சிறுவன் அழைத்து வரப்பட்டான் (சுமார் 250 கி.மி). அவனை அழைத்து வந்த ஆயர் அவனை அடிக்கடி பார்க்கவருவதாகச் சொன்னதற்கு நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அவர் தானியேலின் தகப்பனிடத்தில் அவன் ஒரு ஆடுவெட்டுபவனது வீட்டில் இருக்கிறான் என்று சொல்லிவிட்டார். கோபமடைந்த தகப்பன் அவனுக்கு T.C. வாங்கித்தர மறுத்துவிட்டார். ஆகவே அவனைப் பள்ளியில் சேர்க்கமுடியவில்லை. சம்பல்பூரில் நீங்கள் வந்துப் பாருங்கள் என்று அவருக்குக் கடிதமெழுதி னோம். அவர் வந்துப் பார்த்துவிட்டுப் பரவசமடைந் தவராய் T.C. வாங்கி அனுப்பினார். நான்காம் வகுப்பில் தானியேலைச் சேர்த்துவிட்டோம். ஒடிசா பசிப்பிணி நிவாரணப்பணி ஊழியர் அவ்வப்போது வந்து பார்ப்பர்.

தானியேல் நல்லப் பையனாயிருந்து வெகுவாக ஒத்துழைத்தாலும் பலவிதத்தில் அவனை வனைய வேண்டியிருந்தது. பள்ளிக்குப் போகாமலிருந்த அவனது சிறிய தங்கையைக்குறித்துக் கூறினான். அவனுடைய தகப்பனுக்கு எழுதி அவளையும் அழைத்துக்கொண்டோம். ஒன்றாம் வகுப்பில் சேர்க்கப்பட்டாள். இருவரும் ஆரோக்கியமாக வளர்ந்து நன்றாகப் படித்தனர். அவர்களது கிராமத் திற்கு அழைத்துச் சென்றோம். அவர்களது வாழ்க்கை யில் காணப்பட்ட மாறுதலைக் கண்டு மக்கள் அதி சயித்து அகமகிழ்ந்தனர்.

தானியேல் மெட்ரிக்குலேஷன் தேறினதும் திரு முழுக்குப் பெற்றான். ஆசீர்வாத இளைஞர் இயக்க மிஷனரி செழியன் அவ்விழாவில் கலந்துகொண்டார். எங்களுக்குப் பிறகு பிள்ளைகளின் கதி என்ன என்று கவலைப்படத் துவங்கினோம். ஆகவே B.Th படிப்பிற்கு அவனை கேரளா அனுப்பிவைத்தோம். அதில் தேர்ச்சியடைந்த பின்னர் 2 ஆண்டு நர்ஸிங் படிப்பிற்காக பெங்களூரு அனுப்பிவைத்தோம். டிஸ்டிங்ஷனில் தேறினான்.

தானியேல் நன்றாக சமைப்பான், பாடுவான். கொஞ்சம் கிட்டாரும் போடுவான். ஐக்கியங்களில் பாடல் சொல்லிக்கொடுப்பான். நற்செய்திப்பணியில் விருப்பமுள்ளவனாகையால் தன் இந்து நண்பர்களை கோவிலுக்கு அழைத்து வருவான். எப்பொழுது தேவனை சேவிப்போம் என்று ஏக்கத்துடன் சம்பல்பூரிலிருக்கும் ஒரு பல் மருத்துவருக்கு உதவி யாளராக வேலை செய்கிறான்.

சுமன் CBSE பத்தாவது படிக்கிறாள். அவளுக்கும் ஊழிய வாஞ்சையுண்டு. சமீபத்தில் தானியேலுக்கு ஒரு நிலமும் BYMற்கு ஒரு நிலமும் வாங்கியுள்ளோம். தேவனுடைய நாமம் மகிமைப்படுவதாக. ❒

— சிரில் & ஸ்நிகிதா கிறிஸ்டியன், சம்பல்பூர்.
கைபேசி: 09437419709



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com




*கெசியா ஜோசப், குர்கான்*

எனக்குத் தெரிந்த நாள்முதல் திருவிழா என்றாலே வாய்கிழிய சிரிப்பதும், இனிப்புகளும் பட்டாசுகளும், விடுமுறைகளும், விருந்துண்டு பருமன் கூடுவதும், குடும்பக் கூடுகைகளும்தான்! கொண்டாட்டம் துவங்க பொறுமையின்றி துடிப்புடன் காத்திருக்கிறோம். அலுவலக விளக்குகளை அணைத்துவிட்டு தெருவில் கால்வைக்கும்போது சுதந்திரக் காற்றை சுவாசிப்பதுபோன்ற உணர்வு. விருப்பமான பாடல் வாயில், உற்சாகமான குதிப்பு காலில்! இன்னும் வீடுவரவில்லையே என்று தெருவில் போக்குவரத்து நெரிசலால் நகரமுடியாமல் மாட்டித் தவிக்கும் நேரத்தில் ஒரு பதட்டம்!

ஒவ்வொரு விழாவிற்குப் பின்னும் வீரம், தாழ்மை மற்றும் தீமையை மடங்கடிக்கும் நன்மை போன்ற சரித்திரப் பூர்வமான கதைகளுண்டு. பிள்ளைப் பருவத்திலிருந்தே நாம் கேட்டுக் கேட்டு நம்பி வளர்ந்த கதைகள். இவை நளமக்கு உயிரூட்டி உற்சாகமூட்டி சவால்விடும் என்ற நம்பிக்கை. ஆனால் கொண்டாட்டங்களின் சாரத்தை வழியிலே துலைத்துவிட்டோமோ? நாம் பெற்ற மகிழ்ச்சியை தேவையிலுள்ளோருக்குக் கடத்த மறந்துபோனோமோ? அந்த ஒருநாள் என்றென் றுமாய் நிலைத்திருக்கப்போவதில்லை. நீங்கள் நினைக்குமுன்பே வண்ணவிளக்குகள் அணைக் கப்படும், காதைக்கிழிக்கும் பாடல்கள் தூங்கி விடும், என்றும்போல மறுநாள் பையைத் தோளில்போட்டுக்கொண்டு பொடிநடையாக அலுவலகம் செல்லுவோம். விழா முடிந்து போனாலும் அதன் நினைவுகள் தொக்கிநிற்கும். அதை எப்படிப் பயன்படுத்தலாம்?

வாழ அடிப்படைத் தேவைகளின்றி, வெடிக்கும் இதயத்தைக் கொட்ட இடமின்றி, மன அமைதியும் ஆத்துமசாந்தியுமின்றி கையெட்டுத் தூரத்தில் இருக்கின்றனரே மக்கள். பண்டியலின் உற்சாகம் உங்கள் தகுதிக்கும் மிஞ்சி கொடுப்பதற்கு உங்களுக்குப் பெலனருளும். தேவையுள்ளோரைத் தொட்டுவிட மெய்யாகவே வாஞ்சையுள்ளோராய் இருப்பீர்களானால் உங்கள் கரங்கள் எட்டாத தூரத்திற்கும் நீண்டுவிடும். துக்கத்தையும் மகிழ்ச்சியையும் இணைக்கும் பாலம் இதுவே — மக்களை நெருக்கமாய்க் கொண்டுவருவது இதுவே! இதுவே கொண்டாட்டத்தின் உயிர்மூச்சு. உங்கள் சிரிப்புக்கு ஒரு காரணம் இருக்குமானால் அது மற்றவர்கள் சிரிப்பாகவே இருக்கட்டும்!

என்னைப் பொறுத்தவரை, உலகம் ஒன்றுபடுமானால், நாம் ஒருமனப்படுவோமானால் அதுவே கொண்டாட்டத்தின் சாரமென்பேன். ஒன்றுகூடிவிட்டோம், சரி, கொண்டாடித் தொலைப்போம் என்று நினைக்கிறீர்களா அல்லது ஒன்றாயிருப்பதன் மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறீர்களா என்று அடுத்தமுறை உங்களையே கேட்டுப் பாருங்கள். உங்கள் பதில் என்னவாயிருந்தாலும் பண்டியலுக்குப் பிறகு எல்லா உள்ளங்களிலும் பரவசத்தை விட்டுச்செல்ல கவனமாயிருங்கள். நல்ல நினைவுகள் அடுத்தப் பண்டியலுக்குப் புன்முறுவலோடு மகிழ்ச்சியாய்க் காத்திருக்கச் செய்யட்டும். நீங்கள் எந்த மூலையிலிருந்தாலும் உங்கள் வீட்டில் வண்ண விளக்குகள் எரியுமுன்பாக இன்னொருவரது இதயத்தில் தீபமேற்றிவிட்டீர்களா என்று நிச்சயித்துக் கொள்ளுங்கள். வெகுவிரைவில் நானிருக்கும் உலகத்தின் மூலையில் அதன் கதிர்கள் ஒளிவீசத் துவங்கிவிடும்.

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்! ❒

**கெசியா ஜோசப், குர்கானிலுள்ள MNC ஒன்றில் மனிதவளத்துறை மேலாளராக இருக்கிறார். கைபேசி: 09130043489**



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com

# படிப்படியாய்... !

தீவிர முருக பக்தையாயிருந்த என்னை இயேசுவுக்கு சொந்தமாக்கியவர் என்னுடன் நாகை மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பணியாற்றிய திருமதி. பெரில் ஆல்பர்ட்.

1970ல் அந்தப் பள்ளிக்கு வந்தார்கள். "இலவசமாகப் பெற்றீர்கள், இலவசமாகக் கொடுங்கள்" என்ற மறை வார்த்தையை மறவாமல் கிறிஸ்துவை தன் ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுத்துபவர்கள். விவிலியத்திற்கு மாறான எந்த செயலும் அவர்கள் வாழ்வில் இல்லை. கணவரின் நோய், சம்பளமில்லாத விடுப்பு, தன்னுடைய நோய், கணவரின் மறைவு, மகனின் மணவாழ்வில் அடுக்கடுக்கான சோதனைகள் எல்லாவற்றிலும் அவர்களின் பதில், "இது என் தேவன் அனுமதித்தது."

நான் திருப்பதி சென்று வந்து லட்டு கொடுத்தபோதும் இந்து பண்டிகை நாட்களில் உணவுவகைகள் கொடுத்தனுப்பும் போதும் மறுக்காமல், "உங்கள் அன்பிற்காக தேவனைத் துதிக்கிறேன்" என்று உண்பார்கள்.

'75ல் என்னுடைய காலில் ஏற்பட்ட புற்றுநோய்க்கு சென்னையில் நான் சிகிச்சை பெற்றபோது ஜெபிப்பதாக கடிதம் எழுதினார்கள். நாகை திரும்பிய பிறகு, "வியாழன் தோறும் காலையில் பள்ளி செல்லும் போது என் வீட்டிற்கு வாருங்கள். நாம் இருவரும் சேர்ந்து ஜெபித்துவிட்டு பள்ளி செல்வோம்" என்று அவர்கள் வீட்டிற்கு வரச்சொல்லி, ஸ்தோத்திரம் சொல்ல வைத்தார்கள். பின்னர் வியாழன் தோறும் மாலை நேரங்களில் கிறிஸ்தவ ஆசிரியைகள் கூடி ஜெபிக்கும் வீடுகளுக்கு அழைத்துச் சென்றார்கள். தபசு நாட்களில் தென்னிந்திய திருச்சபை ஆலயத்தில் நடைபெற்ற கூட்டங்களுக்கு அழைத்துச் சென்றார்கள். என் விக்கிரக ஆராதனைபற்றி எதுவும் கூறியதில்லை. அவர்களுக்கு வந்த கிறிஸ்தவப் பத்திரிகைகளை எனக்குப் படிக்கக்கொடுத்தார்கள்.

80ல் நான் வீடு வாங்கியதும் என் கழுத்தில் ஏதோ உட்காருகிறது என்று கூறியபோது 'இயேசுவின் இரத்தம் ஜெயம்' என்று சொல்லக் கற்றுக் கொடுத்தார்கள்.

84ல் நான் இயேசுவை ஏற்றுக்கொண்டபோது, "இயேசு உங்களுக்கு என்ன செய்தார்?" என்று கிறிஸ்தவர்கள் பரிகசித்தனர். "தனி பூஜை அறை வைத்து தினமும் தூபம் காட்டி வந்த உனக்கு என்ன வந்தது?" என்று இந்துக்களும் கேலி செய்தார்கள். ஆனாலும் என்னால் இயேசுவை விடமுடியவில்லையே என்று நான் வேதனைப் பட்டபோது, "உங்களுக்காக சிலுவையில் மரித்தவரை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள்" என்று என்னை ஆறுதல்படுத்தி விட்டு, "ஆண்டவரே! உம்மை வணங்க டீச்சர் வெட்கப்பட வேண்டாம். இந்துக்கள் நிறைந்த பள்ளியில் தைரியமாக உம்மை வணங்கும் கண்ணகி டீச்சரை யாரும் வேதனைப்படுத்த வேண்டாம்" என்று மன்றாடினார்கள். என்னால் சிலரது வெறுப்பையும் அவர்கள் சந்தித்தார்கள்.

திருமுழுக்குப்பற்றி சபைகள் என்னைக் குழப்பிய போது, "உங்களைத் தெரிந்துகொண்டவர் கர்த்தர். அவரே அதற்கென்று நேரம் வைத்திருப்பார்" என்று உற்சாகப்படுத்தினார்கள். நான் வணங்கிய விக்கிர கங்கள் அவர்களுக்கு தொந்தரவு கொடுத்ததை நான் கிறிஸ்துவுக்குள் வேரூன்றிய பின்னரே என்னிடம் கூறினார்க்ள். '91ல் திருமுழுக்கு பெற்றேன்.

என் மூத்த மகன் சரவணன் BYM மிஷனரியாக ஊழியத்திற்குச் சென்றபோது, "கர்நாடகாவில் 500/- ரூ சம்பளத்தில் பணியாற்றுபவனுக்கு யார் பெண் கொடுப்பார்கள்?" என்று கிறிஸ்தவர்களே அலட்சியமாக கூறிய போது, "ஊழியக்காரனைத்தான் திருமணம் செய்வேன் என்று கூறும் பெண்கள் இருக்கிறார்கள்" என்று கூறி, "உன் பிள்ளைகளெல்லாம் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள் உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்," "என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப் படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை" என்ற வேத வசனங்களால் என்னைத் தேற்றி, சரவணனுக்கு தானாக பெண் வரவேண்டும் என்று ஜெபித்தார்கள். இரட்டிப்பான ஆசீர்வாதமாக சரவண னுக்கும் இளைய மகன் குமரேசனுக்கும் தானாக வரன் வர கர்த்தர் கிருபை செய்தார்.

மூத்த மகன் ஊழியத்திற்குச் சென்றபோது பிறரது ஏளனப் பார்வையை சந்தித்ததால், இளைய மகன் முழுநேர ஊழியத்திற்குச் செல்ல மறுப்பு தெரிவித்தான் என்று நான் வருந்தும் போதெல்லாம், "இதுவும் கர்த்தர் சித்தமே. பொறியியல் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டே தன் பணத்தில் ஊழியம் செய்கிறான். அவனால் இயேசுவை அறிந்தோர் எண்ணிக்கை ஆண்டவரின் கணக்கில் அல்லவா இருக்கும்" என்று உற்சாகப்படுத்துவார்கள்.

மயிலாடுதுறை பள்ளிக்கு நான் பணி உயர்வு பெற்று சென்ற போது அங்கு மேரி ஜானகி டீச்சரின் வழிநடத்துதலை ஆண்டவர் தந்தார். முதுமையில், மகன் குடும்பத்துடன் வசிக்க வேலூர் வந்தபோது ஆல்காட் நினைவாலயத்தையும் சாந்தா ஜெயக்குமாரின் அன்பான உதவியையும் தந்து ஆசீர்வதித்தார். அவருடைய கரிசனை எல்லையில்லாதது! ❐

**— திருமதி கண்ணகி செல்வராஜ்,**
**ஓய்வுபெற்ற முதுகலை தமிழாசிரியை, சென்னை.**



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com




*(இப்பட்டியலை உங்கள் வேதாகமத்தில் வைத்து ஒவ்வொரு மிஷனரியின் பிறந்த நாளில் ஜெபியுங்கள்)*

| | | |
|---|---|---|
| 1. | கைத்தாரி கொளோரி | (01 ஜன 1982) |
| 2. | சந்தோஷினி ஆஷிஷ் தீப் | (01 ஜன 1985) |
| 3. | செல்வி சேவியர் | (02 ஜன 1966) |
| 4. | ரோஸ் ஆலன், G.M. | (03 ஜன 1977) |
| 5. | ஸ்டீபன் தனராஜ், L. | (03 ஜன 1955) |
| 6. | சஞ்சய் துருக் | (03 ஜன 1977) |
| 7. | பிரபாசினி பாட்ரோ | (09 ஜன 1982) |
| 8. | லீன்ஸ் ஜோயல் ஜெய்சிங், S. | (09 ஜன 1976) |
| 9. | பிலேந்திர மண்டி, L. | (10 ஜன 1975) |
| 10. | ஜிட்கு சாண்டா | (10 ஜன 1973) |
| 11. | ரூபேஷ் மசிஹி | (11 ஜன 1966) |
| 12. | பியூலா மோகன்ராஜ் | (13 ஜன 1979) |
| 13. | சரவணன் பால், S. | (15 ஜன 1972) |
| 14. | பிரகாசம், S. | (16 ஜன 1987) |
| 15. | மல்லிகா முருகன் | (17 ஜன 1970) |
| 16. | ஜாய்ஸ் பெருமாள் | (18 ஜன 1985) |
| 17. | டோக்கு கோஸ்லா | (20 ஜன 1986) |
| 18. | ஜெயசிங், A. | (21 ஜன 1969) |
| 19. | பரசுராம் நேதம் | (22 ஜன 1968) |
| 20. | நிரஞ்சன் துருக் | (23 ஜன 1974) |
| 21. | தனுஜா கிஷோர்குமார் | (25 ஜன 1982) |
| 22. | எலிசபெத் சுபானந்த் சித்ஹி | (26 ஜன 1969) |
| 23. | கண்பத் பிரசாத் | (26 ஜன 1969) |
| 24. | சுச்சித்தா சுபாஷ் வாக்மாரே | (28 ஜன 1982) |
| 25. | ஈவ்லின் குமார் | (01 பெப் 1985) |
| 26. | தமிழரசன், P. | (02 பெப் 1960) |
| 27. | நேத்ராவதி நாகப்பா பட்ரொட்டி | (02 பெப் 1981) |
| 28. | ஜெய்சங்கர், M. | (03 பெப் 1967) |
| 29. | குன்னி கோயாராம் | (04 பெப் 1984) |
| 30. | ஐடா தேவநேசன் | (05 பெப் 1962) |
| 31. | பழனியம்மாள் பால் | (05 பெப் 1969) |
| 32. | இலட்சுமணன், R. | (07 பெப் 1973) |
| 33. | ஷாலிமா ரூபேஷ் மசிஹி | (07 பெப் 1978) |
| 34. | தனோ சான்டா | (08 பெப் 1980) |
| 35. | தனுஜா ராஜு குர்னே | (08 பெப் 1975) |
| 36. | குன்னி டைட்டஸ் பரஜா | (09 பெப் 1981) |
| 37. | சஸ்மிதா தனோ சாண்டா | (10 பெப் 1981) |
| 38. | வசந்தி ரெகுநாதன் | (11 பெப் 1959) |
| 39. | எலிசா, R. | (14 பெப் 1958) |
| 40. | ஜெசிந்தா கிறிஸ்டோபர் | (14 பெப் 1975) |
| 41. | ஸ்டீபன் ஜெயராஜ் | (15 பெப் 1967) |
| 42. | பெட்டி பாய் கோமல் | (15 பெப் 1974) |
| 43. | சியாம்சன் மண்டல் | (16 பெப் 1976) |
| 44. | ஜேசன் பிரின்ஸ் விக்டர், D. | (16 பெப் 1980) |
| 45. | புஷ்பலதா சுயம்பு செல்வம் | (16 பெப் 1985) |
| 46. | ஜார்ஜ் ஆலம்பி | (18 பெப் 1977) |
| 47. | ஆல்பர்ட் ஜெயராஜ், I. | (19 பெப் 1971) |
| 48. | தெபொராள் சாலமோன் | (20 பெப் 1978) |
| 49. | ஆனந்தராஜ், E. | (22 பெப் 1968) |
| 50. | தலித்தாகூமி எபினேசன் | (25 பெப் 1966) |
| 51. | புஷ்பா குஷா | (25 பெப் 1966) |
| 52. | சுமதி ஜெசுராகவன் | (26 பெப் 1972) |
| 53. | முருகன், E. | (26 பெப் 1968) |
| 54. | ரீட்டா செல்வராஜ் | (26 பெப் 1968) |
| 55. | மல்லி பசலா ரமணா | (01 மார் 1972) |
| 56. | தமிழரசன் ஜெரேமியா , M. | (01 மார் 1971) |
| 57. | பாக்யலஷ்மி பிராமண் | (01 மார் 1983) |
| 58. | நகோமி மைலா ஜான் | (02 மார் 1971) |
| 59. | ரூபி ஞானப்பிரகாசம் | (02 மார் 1965) |
| 60. | தெரசா செல்வின் | (02 மார் 1981) |
| 61. | ஜான் பால், A. | (03 மார் 1981) |
| 62. | டாலி லீன்ஸ் ஜோயல் | (03 மார் 1978) |
| 63. | ராத்தோடு ராயல் குமார் | (04 மார் 1981) |
| 64. | செழியன், P. | (05 மார் 1964) |
| 65. | லூர்து சேவியர் ராஜ், M | (05 மார் 1983) |
| 66. | ஷஷிகாந்தா பாரிக் | (07 மார் 1985) |
| 67. | ஹிராமணி வியாஸ் | (08 மார் 1972) |
| 68. | வசந்தா கிறிஸ்மஸ் டேவிட் | (10 மார் 1961) |



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com

69. மரியராஜ், K. (12 மார் 1980)
70. ரெட்டி அப்பலசாமி (14 மார் 1977)
71. மோதீஸ் K. சித்ஹி (15 மார் 1963)
72. நிர்மலா குணசேகரன் (18 மார் 1965)
73. ஜோசபின் ஜான் சித்ஹி (19 மார் 1972)
74. பிலோத் மண்டி (20 மார் 1972)
75. ஜெனிபர் ஜான் பால் (25 மார் 1983)
76. மரியா சுரேஷ் சித்ஹி (26 மார் 1975)
77. ஜெப தினகரன், M. (26 மார் 1981)
78. சந்தானு குமார் கொரடா (29 மார் 1963)
79. பிமலா சாமல் (01 ஏப் 1958)
80. பிராமண் செல்லா (01 ஏப் 1978)
81. பெரியசாமி, K. (01 ஏப் 1976)
82. தேவராணி விஜயகுமார் (04 ஏப் 1969)
83. மெர்சி அந்தோனிசாமி (05 ஏப் 1977)
84. டெய்சி தனராஜ் (06 ஏப் 1969)
85. ஆன்ட்ரியாஸ் சோனி (06 ஏப் 1945)
86. மெர்சி சைமன் பீட்டர் (07 ஏப் 1972)
87. சலோமி கலோரி (09 ஏப் 1989)
88. பாமா ஜான் மில்டன் (10 ஏப் 1978)
89. மஞ்சுளா மகேந்திரா பால் (10 ஏப் 1972)
90. பிரபாதி சுரேஷ் சாண்டா (10 ஏப் 1978)
91. பகவான் பங்கி (11 ஏப் 1970)
92. பிஸ்வநாத் சாமல் (11 ஏப் 1956)
93. சுனந்தா ஸித்தப்பா (12 ஏப் 1976)
94. பால் டேவிட், R. (15 ஏப் 1973)
95. பிரேமிகா ஹிரன் கோஸ்லா (16 ஏப் 1977)
96. நபினா நேத்ரானந்தா டோங்ரி (16 ஏப் 1981)
97. சாமுவேல் வசந்த் ரகுட்டே (17 ஏப் 1972)
98. சந்திரசேகர் சதமால் (18 ஏப் 1964)
99. கோமல் பிரசாத் (20 ஏப் 1971)
100. சுபானந்த் சித்ஹி (20 ஏப் 1969)
101. பிரிஸ்ஸில்லா ஜேம்ஸ் (20 ஏப் 1981)
102. சுகந்தினி சரவணன் (22 ஏப் 1973)
103. பபித்ர குமார் பாக் (25 ஏப் 1983)
104. சக்கரியா சசிகுமார், S. (25 ஏப் 1986)
105. அனிதா புஷ்பராஜ் (27 ஏப் 1970)
106. ஜேம்ஸ் இம்மானுவேல், T. (28 ஏப் 1980)
107. பீட்டர் லூயிஸ், L. (29 ஏப் 1957)
108. செமி சியாம்சன் மண்டல் (30 ஏப் 1985)
109. மைலாப்பூ (01 மே 1979)
110. வடிவேல் ஜேம்ஸ், S. (01 மே 1981)
111. புஷ்பராஜ், L. (02 மே 1969)
112. எபினேசர் ஜெப தினகரன் (03 மே 1982)
113. சாம் மாடசாமி, A. (04 மே 1978)
114. சரிதா சோமசுந்தரம் (05 மே 1983)
115. குமார், A. (06 மே 1980)
116. சத்தியவதி பொன்னையா (06 மே 1957)
117. பால் ஆபிரகாம், A. (06 மே 1974)
118. ஜெயா அன்பு சாமுவேல் (06 மே 1956)
119. லதா ராமநாதன் (07 மே 1972)
120. எஸ்தர் ரூபன் கோயில்பிச்சை (07 மே 1982)
121. பாரதி நிரஞ்சன் துருக் (08 மே 1985)
122. பிலாசினி கிதியோன் பானி (08 மே 1964)
123. பிரபுதாஸ் பாட்ரோ (08 மே 1978)
124. இம்ராட் அஹிர்வார் (10 மே 1976)
125. சக்திவேல், A. (10 மே 1976)
126. சாந்தி ஆமோஸ் பாக் (10 மே 1977)
127. கைலாஷ் நாக் (10 மே 1977)
128. மோகன்ராஜ், P. (10 மே 1976)
129. ரெபெக்கா இம்மானுவேல் (10 மே 1981)
130. ஜெசுபாதம் ராஜதுரை, C. (10 மே 1973)
131. ஜெயஜோதி ஜெயராஜ் (10 மே 1968)
132. சாலமோன் K. (12 மே 1975)
133. ரபீந்திர குஷா (12 மே 1986)
134. உக்கியாபாய் பரசுராம் நேதம் (13 மே 1972)
135. கதிர்வேல், A. (13 மே 1977)
136. சகுந்தலா பிலேந்திர மன்டி (13 மே 1978)
137. ரூபன் கோயில் பிச்சை, J. (13 மே 1982)
138. சீமா பிரகாஷ் (15 மே 1979)
139. சுரேஷ் K. சித்ஹி (15 மே 1971)
140. நித்யா கதிர்வேல் (15 மே 1982)
141. ஜான் மில்டன், A. (15 மே 1976)
142. ஜேசுதாஸ் மோசஸ், D. R. (15 மே 1972)
143. சகுந்தலா சந்திரசேகர் சதமால் (15 மே 1968)
144. சிநேகலதா பிலிப் பிஷோயி (15 மே 1956)
145. சகுந்தலா சாலமோன்தாஸ் (16 மே 1965)
146. வீணா வினோத் மல்லப்பா (18 மே 1978)
147. எபினேசர் சாமுவேல், D. (19 மே 1958)
148. துரை, K. (20 மே 1972)
149. பிரகாஷ் சந்திரநாக் (20 மே 1966)
150. ஜெயசுதா சாம் மாடசாமி (20 மே 1983)
151. தனராஜ், T. (21 மே 1966)
152. ராஷ்மி கிறிஸ்துதாஸ் குல்தீப் (21 மே 1982)
153. ராமநாதன், V. (22 மே 1967)
154. ஸ்மித்தா சாமுவேல் வசந்த் (23 மே 1979)
155. சில்வெஸ்டர் ஜான், S. (24 மே 1980)
156. சுயம்பு செல்வம், P. (24 மே 1980)
157. பாரதி சரோஜ் அப்பட் (25 மே 1982)
158. பெருமாள், K. (25 மே 1980)
159. அந்தோனிசாமி, V.A.K. (26 மே 1975)
160. தீனா எலிசா (27 மே 1960)
161. ஞானப்பிரகாசம், J. (27 மே 1960)
162. அசோக் குமார் (28 மே 1975)
163. இன்பநாதன், T. (28 மே 1984)
164. ஜெயக்குமார், M. (29 மே 1973)
165. சைமன் பீட்டர், V. (30 மே 1970)
166. கிதியோன் பானி (01 ஜுன் 1960)
167. கிரேஸ் ஹிராமணி வியாஸ் (01 ஜுன் 1969)
168. சுந்தரமூர்த்தி, A. (01 ஜுன் 1955)
169. ஜான்ஸி ஆனந்தராஜ் (01 ஜுன் 1964)
170. ஜான் சித்ஹி, R. (01 ஜுன் 1968)



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com

171. ராபின்சாம், R. (01 ஜூன் 1962)
172. ராஜாராம் விட்டல் ஐவாலே (01 ஜூன் 1974)
173. ராஜு D. குர்னே (01 ஜூன் 1973)
174. ரேஷ்மா பவார் (01 ஜூன் 1972)
175. வினோத் மல்லப்பா, S. (01 ஜூன் 1972)
176. தேவக்குமார், S. V. (02 ஜூன் 1964)
177. ஜெரிஷா ராஹேல், G. (03 ஜூன் 1984)
178. சஞ்ஜீப் தீப் (03 ஜூன் 1966)
179. பெரியசாமி செல்வின், A. (04 ஜூன் 1978)
180. மல்லிகா துரை (04 ஜூன் 1980)
181. ஷாத்ராக், K. (04 ஜூன் 1978)
182. கிருபாவதி ஜெசுபாதம் (07 ஜூன் 1979)
183. விநாயகம் டேவிட், K. (07 ஜூன் 1961)
184. ஜெயா ஜூலியஸ் (07 ஜூன் 1970)
185. பெல்பின் ஜோதி விக்டர் (08 ஜூன் 1983)
186. பிரேமலதா செழியன் (09 ஜூன் 1969)
187. அம்பிகா மைலாப்பூ (10 ஜூன் 1983)
188. ரெபேக்கா பிலோத் மண்டி (10 ஜூன் 1971)
189. சுஸ்மித்தா மொகந்தி டக்ரி (10 ஜூன் 1979)
190. சைலஸ் கோஸ்லா, J. (10 ஜூன் 1971)
191. பிங்க்கி உதய்பான் (10 ஜூன் 1982)
192. உதய்பான் சிங்ராணா (13 ஜூன் 1977)
193. சுதா அருண் (13 ஜூன் 1978)
194. பிரபாதி சுசான்த் டிகால் (13 ஜூன் 1978)
195. அபிமன்யு பாத்ரா (14 ஜூன் 1972)
196. கல்பனா ரபீந்தரநாத் தாஸ் (14 ஜூன் 1977)
197. ஸித்தப்பா, H. S. (14 ஜூன் 1969)
198. சுலோச்சனா ராயல் குமார் (17 ஜூன் 1983)
199. சஞ்சீவ் டோங்ரி (18 ஜூன் 1960)
200. பிரமோதினி பாட்ரா (19 ஜூன் 1976)
201. அன்பு ஸ்டீபன் தனராஜ் (20 ஜூன் 1957)
202. சாலமோன் தாஸ் (25 ஜூன் 1963)
203. மைலா ஜான் (28 ஜூன் 1958)
204. எஸ்தர் ராணி கேசவன் (28 ஜூன் 1966)
205. ஷிவ்ராம் ரோஷன் (28 ஜூன் 1975)
206. ஜான்சன் கோய்ட் (23 ஜூன் 1983)
207. பால்சந்த் பிரசாத் (29 ஜூன் 1971)
208. சகுந்தலா பால் (30 ஜூன் 1975)
209. மீனா கைலாஷ் (30 ஜூன் 1979)
210. தேவநேசன், J. J. (01 ஜூலை 1962)
211. பசல ரமணா (01 ஜூலை 1972)
212. பொன்னுசாமி, V. (01 ஜூலை 1955)
213. ஹரிராம், A. (01 ஜூலை 1972)
214. ஹரிராம், K. (01 ஜூலை 1974)
215. சாந்த் கௌடா பிரதார் (01 ஜூலை 1975)
216. சுசாந்த் டிகால், T. (02 ஜூலை 1972)
217. ரூபி தேவகுமார் (02 ஜூலை 1967)
218. ஸ்மித்தா ஜார்ஜ் ஆலம்பி (02 ஜூலை 1984)
219. லீலன் பன்ஸ்கர் (04 ஜூலை 1972)
220. கார்த்திகா கைலாஷ் நாக் (05 ஜூலை 1980)
221. கோயாராம் பாகேல் (05 ஜூலை 1980)
222. ரத்னாகர் ராவ், G. (07 ஜூலை 1967)
223. விஜயகுமாரி பால் டேவிட் (08 ஜூலை 1980)
224. மொகேந்திர பால் (10 ஜூலை 1968)
225. ஆமோஸ் பாக் (12 ஜூலை 1975)
226. அஜய் சுனா (15 ஜூலை 1977)
227. மொகந்தி சந்திரா டக்ரி (15 ஜூலை 1978)
228. பால் வசந்தராஜ் (15 ஜூலை 1974)
229. நிர்மலா கில்பர்ட் (15 ஜூலை 1969)
230. பால், R. (16 ஜூலை 1967)
231. குமோதினி பபித்ரகுமார் பாக் (18 ஜூலை 1988)
232. அருண் ஜெயராஜ் (20 ஜூலை 1973)
233. எஸ்தர் பெர்சி ஜேசன் (20 ஜூலை 1981)
234. நாகப்பா (20 ஜூலை 1972)
235. நாராயண் சன்யா சித்ஹி (20 ஜூலை 1961)
236. நேத்ரானந்தா டோங்ரி (20 ஜூலை 1978)
237. கைலாஷ் K. மானே (21 ஜூலை 1977)
238. குந்தலா சைலஸ் கோஸ்லா (22 ஜூலை 1980)
239. சுபாஷ் நலவடே (22 ஜூலை 1975)
240. ஜூலியஸ், D. (24 ஜூலை 1967)
241. விக்டர் ஜெயக்குமார், W. (24 ஜூலை 1972)
242. M. குமார் (24 ஜூலை 1970)
243. சகாமணி பகவான் பங்கி (25 ஜூலை 1972)
244. ஆஷீஷ் தீப் (26 ஜூலை 1976)
245. சுமா ஷாந்தி கௌடா (31 ஜூலை 1985)
246. சுமங்கலி ஜெரேமியா (01 ஆக 1974)
247. சுரேஷ் பாபு கொண்டட்டி (01 ஆக 1982)
248. ரபீந்ரநாத் தாஸ் (06 ஆக 1972)
249. விஜயகுமார், B. (06 ஆக 1968)
250. எஸ்தர் சாமிதாஸ் (10 ஆக 1966)
251. சதா நாக் (10 ஆக 1975)
252. மைலி லட்சுமணன் (10 ஆக 1982)
253. மல்லிகா தமிழரசன் (10 ஆக 1959)
254. தேவநேசகி விநாயகம் (14 ஆக 1967)
255. சரோஜினி அஜய் சுனா (15 ஆக 1979)
256. தேவகி நாராயண் சித்ஹி (21 ஆக 1963)
257. ரூத் மணிவண்ணன் (25 ஆக 1961)
258. ஹர்சமணி சாலமோன் மண்டிங் (26 ஆக 1982)
259. கேத்தரின் கிருஷ்ணன் (29 ஆக 1972)
260. பவார், R. S. (01 செப் 1965)
261. சாமிதாஸ், S. (06 செப் 1960)
262. ஜூலி பெரியசாமி (06 செப் 1978)
263. சஞ்சு சதா நாக் (07 செப் 1979)
264. மணிவண்ணன், M. (14 செப் 1960)
265. மேரி ஸ்டெல்லா ஷாத்ராக் (14 செப் 1978)
266. தானேஸ்வர் ஜனா (15 செப் 1978)
267. நரேந்திர குமார் குஷா (15 செப் 1961)
268. சுபர்ணலதா கொரடா (16 செப் 1967)
269. டைட்டஸ் பரஜா (16 செப் 1975)
270. சேவியர், K.P. (19 செப் 1958)
271. ராஜாமணி, S. (22 செப் 1975)
272. கமலினி சம்பத் (23 செப் 1982)



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com

273. ரூத் சுபாஷ் நலவடே (23 செப் 1985)
274. விக்டோரியா ஆல்பர்ட் (25 செப் 1974)
275. ஜெயந்தி சக்திவேல் (25 செப் 1976)
276. சுரேஷ் சாண்டா (01 அக் 1974)
277. உஷா எபினேசர் (02 அக் 1954)
278. இவாஞ்சலின் ராஜாமணி (03 அக் 1980)
279. சாமுவேல் ஜோதிராஜ் (06 அக் 1955)
280. இவாஞ்சலின் பாக்கியவதன் (07 அக் 1979)
281. மோனிகா ரோஸ் ஆலன் (08 அக் 1979)
282. இந்திரா ஜிட்கு சாண்டா (10 அக் 1977)
283. சாந்தி சுந்தரமூர்த்தி (10 அக் 1964)
284. ரவீந்திரன், N. (10 அக் 1971)
285. ஹிரன் கோஸ்லா (12 அக் 1975)
286. கலாவதி பிரேம்குமார் (13 அக் 1970)
287. மெர்சி ஜேசுதாஸ் மோசஸ் (13 அக் 1973)
288. ஜேசுதாசன் செல்வராஜ், J. (16 அக் 1962)
289. சோமசுந்தரம், D. (17 அக் 1979)
290. கிறிஸ்துதாஸ் குல்தீப் (20 அக் 1974)
291. சரோஜ்குமார் அபட் (23 அக் 1981)
292. மரியம் தனேஷ்வர் ஜனா (30 அக் 1982)
293. லலிதா J. மதன்சிங் (30 அக் 1956)
294. ஈஸ்வரி அப்பலசாமி (01 நவ 1983)
295. ராபின்சன் கில்பர்ட் (02 நவ 1969)
296. சுதாமா பிரகாஷ் நாக் (06 நவ 1971)
297. விஜயா வடிவேல் (10 நவ 1986)
298. திவ்யா கிதியோன் (13 நவ 1953)
299. பிளாரன்ஸ் ஜெய்சங்கர் (14 நவ 1962)
300. சாந்தி எபினேசர் சாமுவேல் (20 நவ 1964)
301. மேரி மோதிஸ் சித்ஹி (21 நவ 1970)
302. ஜான்ஸி ஜெயக்குமார் (22 நவ 1978)
303. ஜோதி ரத்னாகர் ராவ் (25 நவ 1972)
304. சுபாஷ் வாக்மாரே (25 நவ 1975)
305. சாமுவேல் குமார் ஹன்ட்டல் (26 நவ 1980)
306. கேசவன், K. (01 டிச 1965)
307. வெங்கட்டம்மா ஜோசப் (04 டிச 1964)
308. பிரகாஷ், L.M.R. (05 டிச 1974)
309. சீமா சஞ்சீவி டோங்ரி (06 டிச 1975)
310. சாலமோன் மண்டிங் (10 டிச 1975)
311. பகவதி ஹரிராம், K. (20 டிச 1977)
312. பாக்கியவதன், A. (22 டிச 1975)
313. கிறிஸ்டோபர் ஞானசீலன், R. (23 டிச 1968)
314. மோகனகிருஷ்ணன், S. (23 டிச 1967)
315. ஜாய்ஸ் அனுராதா பெருமாள் (24 டிச 1982)
316. கிறிஸ்மஸ் டேவிட், M. (25 டிச 1954)
317. பிரேம் குமார், D. (25 டிச 1967)
318. ஜெசுராகவன், K. (25 டிச 1956)
319. கிஷோர் குமார் ஜகத் (27 டிச 1980)
320. எஸ்தர் இராபின்சாம் (28 டிச 1970)
321. ஹேனா சாமுவேல் ஜென்ட்லி (28 டிச 1963)
322. எஸ்தர் இன்பக்குமார் (31 டிச 1978) ●




## ஹலோ!

அன்பான வாசகரே,

நற்செயல்களைக் குறித்த கருத்துக்களை நீங்கள் பகிர்ந்து கொள்ளும்படியாக உங்களுக்காக ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உங்கள் எண்ணங்களை கையெழுத்தாக A4 பேப்பரில் நான்கு பக்கங்கள் அல்லது தட்டெழுத்தாக இரண்டு பக்கங்கள் எழுதலாம். யாராவது செய்த உதவியினால் நீங்கள் வாழ்க்கையில் தூக்கிவிடப்பட்டிருக்கிறீர்களா? அல்லது நீங்கள் யாருக்காவது நற்செயல் செய்து உதவியிருக்கிறீர்களா? எதுவானாலும் தெரியப்படுத்துங்கள். உங்களை ஊக்குவிக்கும்படியாக தானியேலின் கதையைப் பிரசுரித்துள்ளோம். சிறு நற்செயலானாலும் பரவாயில்லை. நான்கிலிருந்து நானூறு வரிகள் வரை எழுதலாம். ஒன்றுக்கு மேலான கட்டுரையும் எழுதலாம். நாங்கள் சரிசெய்து கொள்வோம். தொழுநோயினர், AIDS நோயாளிகள், விதவைகள், வறியவர், அண்ணகர், மாற்றுத் திறனாளிகள், போலியோவால் பாதிக்கப்பட்டோர், கைதிகள், அந்தகர், அநாதைகள்... பட்டியலுக்கு முடிவேயில்லை... மத்தியில் ஊழியம் செய்கிறீர்கள் என்றால் உங்கள் கதையைக் கேட்கக் காத்திருக்கிறோம். புகைப்படங்கள் இணைக்கலாம். உங்கள் பெயர், விலாசம், கைபேசி எண் மற்றும் மின் அஞ்சலுடன் எழுதி அனுப்புங்கள். பதிப்பாசிரியர், பிளஸ்ஸிங், சர்ச் காலனி, வேலூர் 632 006, இந்தியா என்ற முகவரிக்குத் தபாலில் அனுப்பலாம் அல்லது bym.magazine @gmail.com என்ற மின் அஞ்சலுக்கு அனுப்பலாம். இவ்வாண்டு ஒருவரிடத்திலிருந்து ஒருவர் அதிகமாகக் கற்றுக்கொள்ளப் போகிறோம். எமது பிற வாசகர் உங்கள் கட்டுரையினால் உற்சாகப்படுத்தப்பட்டு பரலோகத்திலிருக்கிற பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்துவார்களாக. உங்கள் சாட்சி அவர்களும் நற்செயல்களைச் செய்ய உந்தித் தள்ளட்டும்.





PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com


சித்தேரி மலை ஜனவரி 14—17
Halo-2012
வாலிபர் விண்ணொளி முகாம்


சிறப்பு அம்சங்கள்
✦ ஆலோசனை நேரம்
✦ கேள்வி பதில்
✦ இனிய செய்தி
✦ கலந்துரையாடல்
✦ கலைநிகழ்ச்சிகள்
✦ பொங்கல் கரும்பு
மற்றும் பல
தகவல்கள்
❖ 2012 ஜனவரி 14–17
(சனி மாலை 6 மணி முதல் செவ்வாய் மதியம் வரை)
❖ ஆசீர்வாத மையம், சித்தேரி மலை, தருமபுரி.
❖ சேலத்திலிருந்து வடஆற்காடு–திருப்பத்தூருக்குச்
செல்லும் வழியில்(60கி.மீ) அரூர் உள்ளது
❖ அரூரிலிருந்து சித்தேரிக்கு (25கி.மீ)பேரூந்து வசதி உள்ளது.
❖ வேதாகமம், தட்டு, டம்ளர், படுக்கை, குளிராடைகள்,
டார்ச் லைட் கொண்டு வாருங்கள்.
❖ 16–25 வயதிற்குட்பட்ட மணமாகாத வாலிபருக்கு...
❖ பதிவுக் கட்டணம் ரூ.125/-
தொடர்புக்கு
Mr. E.சாமுவேல் ரத்னசாமி 9443467329
Mr. M.R.பால்ராஜ் 9443614765
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
சர்ச் காலனி, வேலூர்–632006.
www.sfj.bym-india.org